மலைகை

ஆசிரியர் : டொமினிக் ஜீவா

ஒக்டோபர் 1970

விலை 35 சதம்

கலை, இலக்கிய மாத இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

P. I. FERNANDO
SPECIALISED OPTICIAN
AND DENTAL WORK
51 MAIN STREET
JAFFNA

ஓர் முறை
விஜயம் செய்யுங்கள்

கண் பரிசோதித்து
கண்ணாடி கொடுப்பவர்கள்
அழகிய பற்களைக்கொண்டு

- உயர்ந்த முறையில்
- சிறந்த வகையில்
- வெகு திறமையாக
- நவீன முறையில்

பல் கட்டுபவர்.

P. I. பெர்னான்டோ
51A, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

SAPHIRE RADIO TECHNIC
84, MAIN STREET.
JAFFNA.

ரேடியோ விற்பனையாளர்கள்
ரேடியோ திருத்துபவர்கள்

ரேடியோ சம்பந்தப்பட்ட சகல உபகரணங்களும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

சபையர் ரேடியோ டெக்னிக்
84, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆடுதல் பாடுதல் சித்திரம்-கவி
யாதியினைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட்டொன்றும் நடப்பவர் - பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்"

கொடி 4 ஒக்டோபர் – 1970 மலர் 29

அலுவலகம்:
60, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (இலங்கை)

மல்லிகையில் வெளிவரும் கதைகளிலுள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. கட்டுரைகளில் வெளிவரும் கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

இந்த மலரில்...

இலங்கையின்
பிரபல படைப்பாளிகள்
எழுதுகின்றனர்

அட்டைப்படம்
'வரதர்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் மாத இதழில் உருளைக்கிழங்கும், திராட்சைப்பழமும் என்ற தலையங்கம் என் மனதைக் கவர்ந்து சிந்திக்கத் தூண்டியது.

கோலாகலக் கலை விழாவில் நெல்லை க. பேரன் கட்டுரை படிக்க சுவையாகவும், பல உபயோகமான விஷயங்களை அறியவும் உதவியாக இருந்தது.

சினிமா நடிகைகளின் பின்னல் இன்றைய பத்திரிகைகள், (தமிழகத்தில் இப்போது அதிகமாகிவிட்டது) வால் பிடித்துத் திரியும் அவலப் போக்கை தாங்கள் நன்முகச் சாடியிருக்கிறீர்கள். இன்னும் கே. ஆர். விஜயா மாங்காய் தின்றதைத்தான் இங்குள்ள சில பத்திரிகைகள் வர்ணித்து பக்கத்தை நிரப்பிக்கொண்டிருக்கின்றன.

நாய்வாலை நிமிர்த்த முடியுமா?

திரு. தெனியான் எழுதியுள்ள 'ஒதுக்கித் தள்ளுங்கள்' கட்டுரையை வரவேற்கிறேன். வரவர திரு. ஜெயகாந்தனின் போக்கு மிக மிக மட்டமாகப் போய்விட்டது. ஆனந்த விகடனில் அவர் எழுதிவரும் 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்' என்ற தொடர் கதை - வெறுங் குப்பை! வாராவாரம் வளாவளாவென்று மூன்றாந்தர எழுத்தாளர்போல் இழுத்துக்கொண்டு போகிறார்.

அவருடைய 'ஞானரதம்' பத்திரிகையில் வரும் கவிதைகளோ, சொல்லத்தரமன்று.

பத்தினிக் கதைகள் படிப்பீரே - உம்
மச்சினி கிடைத்தால் விடுவீரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று படுமட்டமாக எழுதுகிறார். சென்ற இதழில் ஒரு கதை 'கட்டிடங்கள் ஆண்குறிபோல் விறைத்து நிற்கும்' என்ற வரிகளும் எழுதக் கூசும் பிறவும்.....

என் மதிப்புக்குரியவராக ஒரு காலத்தில் இருந்த ஜெயகாந்தன் இவ்வளவு மட்டமான எழுத்தாளராக மாறியிருப்பது குறித்து மனம் வருந்தி இதை எழுதுகிறேன்.

எல்லா இலக்கிய ஏடுகளும் அவர்போக்கை சம்மட்டியால் அடிப்பதுபோல் தாக்கவேண்டும். இல்லாவிடில் அக் கொம்பன்; நான் எழுதுவதால் யாரும் கெட்டுப் போய்விடவில்லை என்று சப்பைக் கட்டுக் கட்டுவார்.

தங்கள் மல்லிகையை நான் மாதந்தோறும் வாங்கிப் படிக்க விரும்புகிறேன்- சந்தாக் கட்டுவது என்றால் எப்படி அனுப்புவது.

இராஜபாளையம் (தமிழ்நாடு) இரா. கதைப்பித்தன்

.....

இப்பவும் தங்களின் 'மல்லிகை' இதழுக்கு வருடசந்தா அனுப்ப போஸ்ட் ஆபீஸில் கேட்டேன். அவர்கள் அனுப்பச் செய்ய இயலாது என்று சொல்லி விட்டார்கள். வருடசந்தா, எவ்வளவு என்பதையும், பணம் எப்படி அனுப்புவது என்ற விபரம் அனுப்பிவையுங்கள். பணம் அனுப்புகிறேன். மல்லிகை இதழை எனக்கு சந்தாவாக அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள். 1958 'சரஸ்வதி'யில் எழுதிய தாங்கள், 'தாமரை'யில் ஏனோ தானோ என்று தங்கள் எழுத்தைப் பார்த்தேன். தொடர்ந்து தங்கள் எழுத்தைப் பார்க்க முடியவில்லை. 1970 ஆகஸ் 'தாமரை'யில் 'அனுபவித்தது போதும்' என்ற சிறுகதை என் படைப்புத்தான். புகைப்படத்தோடு பிரசுரமாகியிருந்தது தாங்கள் கண்ணுற்றிருப்பீர்களென நினைக்கிறேன்.

தாங்கள் அனுப்பிய மல்லிகை 1970 மார்ச் இதழை இலக்கிய நண்பர்களின் சுற்றுக்கு விட்டேன்; ரசித்தார்கள். 1970 செப்டம்பர் தாமரை இதழில் 'உள் அழுகல்' என்ற சிறுகதை 'தெணியான்' எழுதியதுதான் இதழுக்கே சிறப்பாக அமைந்தது. மல்லிகை மார்ச் இதழ்தான் நான் முதன் முதல் பார்த்தது. தலையங்கம், எத்துறையிலும் உழைக்கும் கரங்கள் நிலைத்தால் நடக்கும் என்பதை தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளீர்கள். இதை இளைஞர் உலகம் கண்ணுற்றால் விழிப்பேற்படும். இ. சிவானந்தன் படைத்த 'வெப்பியாரம்' கருணையோகன் படைத்த 'அமெரிக்க வீரர்களே! அழைக்கிறது சுடுகாடு' இரண்டிலும் விவசாயியையும், வியட்நாமியரையும் கண்டேன். அடுத்து 'ஜீவ மொழி' பத்து அதில் 'உலகிற்கு எமது நாடு அளிக்கக்கூடிய மகத்தான செய்தியை, நாம் நமது கலை இலக்கியக் கருத்துக்கள் மூலம் தெரிவிப்போம்' என்னை மிகவும் கவர்ந்தது. 'தெணியான்' ஒதுக்கித்தள்ளுங்களில் ஜெயகாந்தனின், தான்தோன்றித் தனத்தைச் சாடுகிறார். மு. தளையசிங்கம் 'விடுதலையும் புதிய எல்லைகளும்' எழுதி, ஒவ்வொரு எழுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளரின் குறுதிசயங்களையும் சித்தாந்தங்களையும் அழகாக படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். ஆக மல்லிகைக்கு (டொமினிக் ஜீவாவுக்கு) எனது பாராட்டுக்கள்.

இராஜபாளையம். கொ. ச. பலராமன்

தங்களோடு கடிதத் தொடர்பு கொள்ள அடிக்கடி நினைத்துக் கொண்டு அலுவல் காரணமாக முடியாது போயிற்று. நீங்கள் முன்பொருமுறை எழுதிய கடிதத்தையும் 'மல்லிகை, இதழ் ஒன்றையும் பத்திரப்படுத்தி வைத்துள்ளேன். வேறு இதழ்கள் கிடைத்தால் பயன் பெறுவேன். இந்தியாவிலிருக்கும் நான் எங்ஙனம் அவற்றைப் பெறுவது? சந்தாதாரனாக ஆவதற்கு என்ன வழி? எங்கள் நாட்டில் நல்ல இலக்கிய இதழ்கள் அருகிப்போன நிலையில் இலங்கை மல்லிகையை வாசிக்க விரும்புகிறேன்.

தஞ்சாவூர். என்.விச்வநாதன்

செப்டம்பர் மல்லிகை மணத்துடனும், கனத்துடனும்பொலிந்து திகழ்ந்தது. கதைகள் எல்லாமே நன்றாக இருந்த போதிலும் 'கடசாதி' தான் சிறப்பானதாக இருந்தது. படிக்கும்போது கண்களைக் கலங்க வைத்துவிட்டார், ஆசிரியர் ரஹீம். சாதி என்னும் பாம்பை பிளக்க இங்கும் ஒரு பாரதி பிறக்க வேண்டியிருக்கும் போலும்! ரஹீமின் படைப்புக்கள் மென்மேலும் மல்லிகை மூலம் மணம் பரப்புமென்று எதிர்பார்க்கிறேன். 'புதியதொரு வேள்வி செய்வோம்' என்ற தலைப்பில் புதியதோர் கவிதை யாத்திருக்கும் சு. வில்வரத்தினத்துக்கு வாழ்த்துக்கள். காத்திரமான, கவர்ச்சியான கவிதை! அவரது கவிதைத் தொழில் தொடரட்டும். புதிய தொரு வாழ்வு நிச்சயம் பூத்துத் தொடரும். எட்டுத் திக்கும் சென்று அலையாமல் கிட்ட உள்ள சிங்கள இலக்கியத்தின் வளர்ச்சியைத் தமிழாக்கிக் காட்டும் முயற்சிக்குப் பாராட்டுக்கள். 'கதையின் முடிவு' சுவையாக இருந்தது. 'லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்' பற்றிய கட்டுரையும் ரசனைக்கும், சிந்தனைக்கும் விருந்தாக இருந்தது

கொழும்பு சு. ஆறுமுகம்

இலக்கியத் தரமுள்ள மல்லிகை பத்திரிகை கனமான பரிசோதனைக்குரிய களமாக இயங்க முயற்சிக்கிறது; என் பாராட்டுக்கள்.

ஆனால் ஆகஸ்டு மாத இதழ் தாங்கிவந்த ரஹீமின் 'கடசாதி' அதற்குப் புறநடை. தவிர்க்கமுடியாத, சுசப்பான விமர்சனத்தைக் கோருவது, ஆனால் இதழ் ஆசிரியரும், கதை ஆசிரியரும் நேர்மையுடன் விழங்க வேண்டும்.

அது ஓர் சிறுகதையா.....?

கேள்வியில் பதில் தொங்குகிறது.

'சோஷலிச யதார்த்தம்' சாதாரண அம் மனமான உண்மைகளை மீறிய விபரீத திரிபுக் கற்பனைகள் அல்ல. ஆழமான இயக்கவாத சக்திகளை இனங்கண்டு கோடிட்டு காட்டும் தனித்துவ முயற்சிகளே.

இரத்தினபுரி. என். கே. மகாலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மல்லிகை' வரவரக் கனங்கொள்வது தெரிகிறது. இம்மாத இதழில் 'லெஸ்ரரை'ப் பற்றிய கட்டுரையும், தலையங்கமும் மிக நன்றாக இருந்தன. சிறுகதைகள் கூடுதலாக வெளியிட்டிருப்பதானதும் கட்டாயம் தொடரப்பட வேண்டியதே. சிங்களக் கதையை மொழிபெயர்த்தவர் நன்கு பெயர்த்துள்ளார். இதனால் கதை நன்கு பதிகிறது. இவரைக் கூடுதலாகத் தாங்கள் பயன் படுத்துவது அவசியமெனத் தோன்றுகிறது.

மேலும் எங்கள் கழகத்தின் கூட்டம் சமீபத்தில் கூட்டப்பட்டபொழுது 'தமிழகச் சஞ்சிகைகளைக் கட்டுப்படுத்துவது' பற்றிக் கலந்துரையாடினோம்.

வெள்ளவத்தை. அ. யேசுராசா

ஆண்டு மலர் இந்தியாவிலிருந்து வெளிவரும் மலர்கள் போல் அந்தர்க் கணக்கில் நிறையில்லாவிடினும் தரம் ஓரளவு பேணப் பட்டுள்ளது. சிறுகதைகள் மிகவும் சிறந்தவையாக உள்ளன. கட்டுரைகள் இன்னும் அதிகமாக இடம் பிடித்திருந்தால் மலருக்கு ஒரு பிடிப்பைக் கொடுத்திருக்கும் என்பது என் அபிப்பிராயம். சிங்கள, சோவியத் இலக்கியத் தொடர்பு மல்லிகையின் கொள்கையைக் கோடிட்டுக் காட்ட ஓரளவு உதவலாம்.

தென்னிந்தியக் குப்பைகளைத் தடைசெய்தல் சம்பந்தமான சலசலப்பை பத்திரிகைகளில் அறியமுடிகிறது. இந்த உத்வேகத்துக்கு முதலடி வைத்தது மல்லிகை என்பதைப் பலர் மறந்தாலும் உண்மை அது என்பது உணர்த்தப்பட வேண்டும்.

திக்குவல்லை. எம். எச். எம். சம்ஸ்

மல்லிகை எனும் பெயரில் தாங்கள் வெளியிட்டு வரும் சகல இலக்கிய மாத இதழ் பற்றி அறிந்து வெகு மகிழ்ச்சி அடைகிறேன்.

ஈழத்து இலக்கிய இதழ்களுக்கு உதவி செய்து வரும் நான் மல்லிகைக்கும் என்னால் முடிந்த அளவில் உதவி செய்வேன்.

எமது ஆசிரிய கலாசாலையிலும், எனது மனைவி பயிற்சிபெறும் அழுத்கம முஸ்லிம் ஆசிரியை கலாசாலையிலும். மல்லிகையை அறிமுகப்படுத்தி விற்பனை செய்து உதவ எண்ணியுள்ளேன்.

அட்டாளைச்சேனை. எம். எஸ். எம். ஆரூஸ்

அண்மையில் 'மல்லிகை' ஆண்டுமலர் படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. உண்மையில் அதன் இலக்கிய ஊற்றுக்கள் ஒப்புயர்வற்ற சிகரமாக விளங்குகின்றது. தாங்கள் நீட்டியுள்ள 'போதம்' படிக்கும் வாசகனை மெய்சிலிர்க்க வைக்கிறது. அது எமக்கு உணர்த்தும் இலட்சிய வேட்கை, அனைவர்க்கும் அணையாச் சுடரை ஏற்றி வைக்கின்றது.

நிந்தவூர். ஏ. எல். எம். சலீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் மல்லிகையில் வெளியான 'கடசாதி' என்ற கதையைப் படித்தேன். அதைப்பற்றிச் சில சொல்ல வேண்டிய வனுய் உள்ளேன்.

கதையில் வரும் கதாநாயகன் ஓர் பட்டதாரி. அதுவும் பொருளியலைச் சிறப்புப் பாடமாக எடுத்துச் சிறப்புச் சித்தி பெற்று கொஞ்சக்காலம் பல்கலைக் கழகத்திலேயே விரிவுரையாள ராகவும் கடமையாற்றியவன். பின்னர் அங்கிருந்து வெளியேறிய தும், அவன் தாழ்த்தப்பட்ட இனத்தவன் என்ற காரணத்தால், அவனுக்கு, அவன் படிப்புக்கேற்ற வேலை கிடைக்காமல் போய் விடுகிறது. அதனால் அவன் தன் குடும்பத்தின் அவலநிலையிலிருந்து தப்புவதற்காக பைத்தியமாக நடிக்கிறான் என்று ஆசிரியர் கதையை முடிக்கிறார்.

இம் முடிவிலிருந்து அக்கதை பற்றி நாம் சில முடிவுகளை வரி சைப் படுத்த வேண்டியவராய் உள்ளோம்.

(1) ஒரு படித்துப் பட்டம் பெற்றவனுக்கு - இன்றைய நடை முறையைக் கொண்டு பார்க்கும்போது - தனது படிப்புக்கேற்ற உத்தியோகந்தான் கிடைக்காவிட்டாலும் தனது வயிற்றைக் கழுவவாவது வேலை ஏதும் பார்க்கமுடியாமல் போய்விட்டது என்பது வேடிக்கை.

(2) உத்தியோகம் கிடைக்காத படியால் தன்நிலையைக் காப் பாற்றிக் கொள்வதற்காகப் பைத்தியமாக நடிக்கிறான். அதுதான் முக்கியம். உண்மையாகவே பைத்தியம் பிடித்துவிட்டது என்று சொன்னால்கூட ஓரளவுக்கு நம்பலாம். ஏதோ ஒரு 'வீக்கேஸா'க் கும் என்று சமாதானம் கூறலாம். ஆனால் இவனே நடிக்கிறான்.

(3) உத்தியோகம் கிடைக்காவிட்டால் கூலிவேலைக்காவது போவதுதானே? ஏன் பைத்தியமாக நடிக்கவேண்டும்? இதைவிடப் பைத்தியகாரத்தனம் வேறுண்டா? அதுவும் ஒரு படித்தவன், பட்டம் பெற்றவன் செய்யும் வேலையா? இதுதான் போராட்ட முறையா?

(4) இந்தச் சிக்கலுக்குக் காரணம் என்ன? இன்னும் அந்தக் கதாபாத்திரத்துக்கு (அல்லது ஆசிரியருக்கு) மத்தியதர வர்க்க மதிப்பீடுகளிலிருந்து விடுபட முடியவில்லை என்பதே உண்மை. அதனால் எதாவது வேலைபார்க்க வெட்கப்பட்டு (கடைசி கூலி வேலையாவது) பைத்தியமாக நடிக்கிறது.

(5) ஆசிரியர் இக்கதை மூலம் சோஸலிச யதார்த்த வாதம் சித்தரிக்கிறோம் என்ற நினைவில் நடைமுறையில் தேறாத கற்பனை வாதத்தில் இறங்கியுள்ளார். அதாவது சோஸலிச கற்பனைவாதம். இளம் எழுத்தாளர்கள் இவற்றை இனங்கண்டு எழுதப் பழக வேண்டும்.

யாழ்ப்பாணம். வி. எம். பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலில் சந்தித்தேன்

மல்லிகையின் அட்டையை அலங்கரிப்பவர் வரதர். மறுமலர்ச்சிக் காலத்து எழுத்தாளரான இவரைப்பற்றி 'முதன் முதலில் சந்தித்தேன்' என்ற தலைப்பில் ஏற்கனவே 15-3-67 மல்லிகை இதழில் அன்பர் பாமா ராஜகோபால் எழுதியுள்ளார். அதில் அவர் எழுத்தாளர் வரதரின் குண பாவங்களைப்பற்றி விரிவாகவே கூறியுள்ளார்.

'வரதர் பல குறிப்பு' என்ற ஒரு அருமையான தொகுப்பு நூலைத் தமிழ் கூறும் நல்லுலகில் தொகுத்துத் தரும் ஓர் அரும் பணியைக் கடந்த பல ஆண்டுகளாக மிகப் பொறுப்புடன் செய்து வருகிறவர் இவர்.

இன்னும் ஒரு மாதத்திற்குள் வெளிவர இருக்கும் வரதர் பல குறிப்பு நூலுக்கான வேலைகளை மிகத் துரிதமாகச் செய்து கொண்டிருக்கும் இவர், இலக்கியப் பிரச்சினை எனக் காதில் கேட்டவுடன் சகல சிரமங்களையும் மறந்து இலக்கியச் சம்பாஷணையில் மெய்ம் மறந்து தன்னை ஈடுபடுத்திக் கொள்வார்.

அடக்க விலையில் மாதா மாதம் குறுநாவல்கள் ஒவ்வொன்றாக வெளியிட ஆரம்ப வேலைகளைச் செய்து முடித்துவிட்ட இவர், இன்னும் நூலுருவில் பல சாதனைகள் செய்ய வேண்டும் என எண்ணிக் காரியமாற்றுகின்றார்.

'திட்டமிட்ட முறையில் இன்றைய சூழ்நிலையைப் பயன்படுத்தி ஒரு சஞ்சிகையை மிகச் சிறந்த தயாரிப்புடன் வெளிக் கொணர்ந்தால் என்ன' என்று சிந்தித்துக் கொண்டு இலக்கிய நண்பர்களுடன் ஆலோசனை கலந்து வரும் இவர், மனம் வைத்தால் நிச்சயம் செயலில் வெற்றிகரமாகச் சாதிப்பார் என்றே எண்ணுகின்றோம்.

பல வியாபாரச் சிக்கல்களுக்கு மத்தியிலும் இலக்கியப் பிரச்சினை என்றால் முன் நின்று கருத்துச் சொல்வதுடன், பல இளம் எழுத்தாளர்களுக்கு ஊக்கமூட்டி உற்சாகப்படுத்தும் பெருங் குணத்தைக் கொண்டவர் இந்த வரதர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புதினம்' என்ற பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. நான் அப்போது கல்லூரி மாணவன். வேறு எந்த ஈழத்துப் பத்திரிகையைத்தான் வாங்கத் தவறினாலும் வரதர் நடத்திய புதினத்தை வாங்கத் தவறமாட்டேன் அப்படியொரு மோகம்.

புதினம் அப்போது ஏதோ ஒரு வகையில், ஒவ்வொரு வாரமும் புதுமையாக வந்துகொண்டிருந்தது. எழுத்திலும் அமைப்பிலும் விஷயங்களை அணுகும் முறையிலும் புதுமை சொட்டிக்கொண்டிருந்தது.

...அந்த ஆனந்தா அச்சகத்தின் கடைசியில் பல வேலைகளை ஒரேநேரத்தில் கவனித்துக்கொண்டிருக்கும் 'பிஸி' மனிதர் ஒருவர் முன்போய் நின்றேன். புதுமை வரதரை அப்பொழுதுதான் முதன் முதலில் நேரில் பார்க்கிறேன், தசாவதானிதான் அவர்.

திறமையுள்ளவர்களைப் பயன்படுத்தி, அவர்களிடம் வேலை வாங்கினாலும் அவர்களுக்கு அத்துறையில் பயிற்சி கொடுத்து, அவர்களைத் தூக்கி விடுவதில் வரதர் மிகச் சிறந்த கலைஞன்.

...இப்படி பாமா ராஜகோபால் வரதரை முதன் முதலில் சந்தித்ததைப் பற்றி எழுதியிருக்கின்றார்.

தயாராகும் வரதர் பல குறிப்பில் இடம் பெறத் தக்க எழுத்தாளர் சகலருடனும் தொடர்பு கொள்ள எவ்வளவோ முயற்சித்தும் பலருடன் தொடர்பு அற்ற நிலையில் தான் இருப்பதாகவும், எனவே கலைஞர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் தன்னுடைய இத் தொடர் முயற்சிக்கு முன்வந்து உதவ வேண்டும் என வும் அடிக்கடி பேசும் பேச்சுக்களிடையே குறிப்பிடத் தயங்குவதில்லை அவர்.

ஈழத்தின் தனித்துவ இலக்கியப் பரம்பரையின் தலை மகன்களில் ஒருவரான வரதர் சொல்லாலும் செயலாலும் இனியவர்; சிறந்த பண்பாளர். ஈழத்து இலக்கியத்தை உளமார நேசிப்பதில் முன் நிற்பவர்.

அன்னாரது உருவத்தை அட்டையில் பதிப்பதில் பெருமிதம் அடைகின்றோம்.

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''திக்குவல்லை — கமால்''

எலிக்கூடு

நானேர் தொழிலாளி
நாளாந்தம் -
இரும்புக் கடைதனிலே வேலை
பார்க்கின்ற பேர்வழி!

ஒற்றை நாழிகைக்குள்
எத்தனையோ மனிதர்களை
சந்தித்து உரையாடும்
சந்தர்ப்பம் கிடைக்கிறது.

அன்றொருநாள்.....
குழிவிழுந்த கண்களும்
தளருடலும் கொண்ட
ஒருமனிதர் எனையண்மி;

''தம்பி, எலிக்கூடு உண்டோ?''
எனவினவ
''இல்லை, எலிப்பொறிதான் இங்குளது''
என்றேன் நான்.

''பாவம், பொறியிலவை
பின்னி இறந்திடுமே!
தேவை கூடொன்றே
சிக்கிவிட்ட பின்பவற்றைத்
தூரக் கொண்டுபோய்த்
திறந்திடலாம்... ஆதலினால்
மேலும் தேடுகிறேன்''
எனமொழிந்து விடைபெற்றார்.

விடைபெற்றாரா.....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்ப ஆசைக்கும்
சொற்ப எதிர்ப்புக்கும்
மனிதனை மனிதன்
அநியாயமாய்க் கொன்றும்
வெட்டியும் குத்தியும்
வெறிதீர்க்கும் இந்நாளில்.....

திங்கு விளைவிக்கும்
சிற்றுயிரே யாகிடினும்
பாங்கான முறையிலதைப்
பெயர்த்துவிட வழிதேடி
ஏங்கி அலைகின்ற.....

குழிவிழுந்த கண்களும்
தளருடலும் கொண்ட
அம்மனிதன் இன்னுந்தான்
விடைபெறவில்லை:
என்னுள்ளத்தில்.....
வீற்றிருக்கின்றார்!

ஈழத்துத்
தமிழ் இலக்கிய
வளர்ச்சிக்கு
இடையறாதுகடந்த
நான்காண்டுகளாக
போராடி வரும்
இதழ்
'மல்லிகை'
உங்களது சந்தாவை
உடன்
அனுப்பி வையுங்கள்

ஆண்டுச் சந்தா
ரூபா 5-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலூர் சிவபாலன்

உரைநடை இலக்கியத்தில்

தமிழில் உரைநடை எப் பொழுது, எப்படி, எதில், யாரால் ஆரம்பிக்கப் பட்டது என்னும் விடயம் இன்று சர்ச் சைக் குரியதாகவேயிருக்கிறது. சர்ச்சையை மொழியியல் அறி ஞர்களிடம் விட்டு விடலாம். இன்று எம்மிடையே எதையும் இத்தகைய பழமையானது இது என்று கூறினுல்தான் எமது மன தில் ஓர் உற்சாகமும், பெரு மையும், பெருமிதமும் ஏற்படு கின்றது. அதுபோலத் தமிழ் உரைநடை பழமையானதா என் றுகேட்போருக்கும் ஒரு சாதக மான பதில் காத்திருக்கிறது:

எமது நூல்களில் மிகவும் பழமையானது. காலத்தால் முந்தியது என்று கணிக்கப்படு வது தொல்காப்பியமாகும். அதிலே ஒரு இடத்தில் 'பாட்டிடைவைத்த குறிப்பினும் [லும் உரைநடை வகையே நன்கென மொழிக' என்றுர் தொல்காப் பியனுர். சிலப்பதிகாரமும் 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என விளம்புகிறது. இதிலிருந்து என்ன புலனுகின் றது என்றுல் உரைநடை ஆங் கிலேயரால் நமக்கு அருளப்பட் டது அல்ல. இதை நாமே கை யாண்டிருக்கிறேம் என்னும் உண் மையே. இருப்பினும் தமிழில் செய்யுள் இலக்கியங்கள் தோன் றி வளர்ந்ததிற்கும், உரைநடை இலக்கியங்கள் அருகியமைக்கும் காரணமென்ன?

இந்நிலைக்குத் தகுந்த காரண முண்டு. ஒரு பொருளை உரை நடையில் உரைப்பது செய்யுளில் அமைப்பதைவிட நீளமாக அமையும். செய்யுள் களோ சொற்களைச் சுருக்கி பொருளை உணர்த்தும். அச்சு இயந்திர வசதியற்ற அக்காலத்தில் ஏடு களில் எழுதுவதற்கு செய்யுள் நடையே ஏற்றதாகவிருந்தது. அது மட்டுமின்றி மனனம் செய் வதற்கும் செய்யுள் வாய்ப்பாக

ஈழமும் தமிழகமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தது. இக் காரணங்களால் முற்காலத்தில் உரைநடை தனது செல்வாக்கை இழந்திருந்தது.

அடுத்து உரைநடை இலக்கியங்களை காண்போம். உரைநடை இலக்கியங்கள் முக்கியமான இரு பெரும் பிரிவுகளில் அடங்கும். ஒன்று கட்டுரை; மற்றையது புனைகதை. புனைகதையை மேலும் இருபிரிவாக ஆக்கலாம். ஒன்று பெருங்கதை (நாவல்) மற்றையது சிறுகதை என்பதாம். உரை நடையின் வளர்ச்சியை நாம் ஆராயும் பொழுது இவ்விரு பெரும் பகுதிகளையும் ஒரு சேரவே காண வேண்டும். ஏனென்றால் எழுத்துக்களால் சொல் உருவாகி சொற்றொடர்களால் வாக்கியம் அமைந்து, வாக்கிய அமைப்பினால் உரைநடை உருவாகின்றது உரைநடையென்பது கட்டுரை, புனைகதை என்ற இரு பிரிவுகளுக்கும் பொதுவானதாய் அமைந்திருப்பதால் உரைநடை பற்றி ஆராய்கையில் இவ்விரு துறைகளிலும் நிகழ்ந்த மாற்றங்களையும் ஆராய்வதவசியம்.

காலரீதியில், உரைநடை வளர்ச்சி தொல்காப்பியர் காலமுதல் உருவாகி வருகின்றது. பழந்தமிழ்ச் செய்யுள் நூற்களுக்கு உரை செய்த உரையாளர்களான நச்சினார்க்கினியர், பரிமேழலகர், நக்கீரர், அடியார்க்கு நல்லார் போன்றோரின் காலங்களில் உரைநடை வடிவம் பெறத் தொடங்கினாலும், அன்று செய்யுளுக்கும் உரைநடைக்கும் வேறுபாடு மிகக் குறைவாகவே இருந்தது. அன்று உரைநடை வடிவத்திற்கு நெகிழ்ந்து விட்டது. இறையனார் களவியலுக்கு நக்கீரர் செய்த உரை இன்று அக்காலத்தின் நடையை உணர உதவுகின்றது. சிறப்பானதும் கூட.

எப்படியிருப்பினும் தமிழுரைநடை துரித வளர்ச்சியும், வளமும் பெற்றது ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில்தான். இதற்கு முதற் காரணமும் முக்கிய காரணமும் அச்சு இயந்திரத்தின் வருகைதான் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. கிறித்து சமய பாதிரிமார்களின்தொண்டு இவ்விடயத்தில் குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையிலும் அவர்கள் பெரும் பணியாற்றினர்.

தமிழுரை நடைக்கு முதற் தொண்டாற்றியவர் என்று குறிப்பிடத் தக்கவர் 1906-ல் மதுரையில் வாழ்ந்த 'தத்துவ போதக சுவாமிகள் என்னும் பாதிரியாராவார். இவருக்கு முன்னர் 1577-ல் ஐரோப்பாவில் பாதிரிமார்கள் கிறித்துவ வேதோபதேசம் என்னும் நூலை அச்சிட்டார்கள். பின்னர் 1596ல் கூட 'அன்றிக்' என்பவர் 'கிறித்துவ விளக்கம்' என்னும் நூலை அச்சிட்டார். இன்று இவை கிடைப்பதற்கில்லை இவை அச்சிடப்பட்டன என்றதற்குசான்று மட்டும்தான் உண்டு. இதனால் தத்துவ போதக சுவாமிகளின் நூல்கள்தான் முதனூல்களா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. இவர் மட்டுமின்றி இவருக்குப்பின் 'பெஸ்கி' எனும் 'வீரமாமுனிவரின்' தொண்டும் ஒப்பற்றது. ஏனைய பாதிரிமார் களினின்றும் இவர் ஒருவகையில் வேறுபட்டவர். மத பிரசாரத் திற்கு மட்டுமின்றி தமிழின் பற்றினால் இலக்கண நூல்களும் செய்தவர் இவர். பிற நாட்ட வருள் தூய செந்தமிழ் நடை எழுதியவர் வீரமாமுனிவரே. அக்காலத்தைய அறிஞர்கள் யாவரும் வடமொழியைக் கலந்து மணிப்பிரவாள நடை யில் நூல்கள் செய்தபோது இவர் இருவகை நடையைக் கையாண்டார். மதப் பிரசார நூல்கள் மக்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காக வட மொழி கலந்த எளிய நடையைக் கையாண்டார். இதற்கு அவி வேக பூரண குருவும் ஏனைய சமயப் பிரசுரங்களும் உதாரண மாக நிற்கின்றன. இலக்கண சம்பந்தமான நூல்களை தூய தமிழில் எழுதினார். இதற்கு 'தொன்னூல் விளக்கம்' ஆதா ரமாகவுள்ளது.

உரைநடை இலக்கியவகை ஒன்றை புனைகதை என்று அடித் துக்கூற முடியாவிட்டாலும், புனைகதையின் சாயலைக்கொண்ட அவிவேக பூரணகுருவும் சீடர் களும் இவர் ஆக்கமாகும். எனவே வீரமாமுனிவர் தமிழுரைநடை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பணியாற்றிய அறிஞராவார்.

19-ம் நூற்றாண்டில் உரை நடை இலக்கியத்திற்குத் தொண் டாற்றிய மற்றையருள் 'பஞ்ச தந்திரம்' தந்த தாண்டவராய முதலியார், 'மனு முறை வாச கம்' எழுதிய இராமலிங்க சுவா மிகள், 'விநோதரசமஞ்சரியின்' ஆசிரியரான வீரசாமிச் செட்டி யார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் ஒவ்வொ ருவரும் ஒவ்வொரு வகையான நடையைக் கையாண்டார்கள். தாண்டவராய முதலியாரின் பஞ்சதந்திரம் மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்ட மொழி பெயர்ப்பு நூலாகும். இராம லிங்க சுவாமிகளின் மனுமுறை வாசகமும் வடமொழி கலந்து எழுதப்பட்ட நூல். அத்துடன் அவர் எழுதிய வாக்கியங்கள் நீண்ட பெரும் வாக்கியங்களாக அமைந்திருந்ததால் அதன்பயன் சிதைவுற்றது. மதப்பிரசார நோக்கத்திற்காக எழுதப்பட்ட அந்நூல் நீண்ட வாக்கியங்களின் காரணமாக மக்களுக்கு எளிதில் விளங்கவேண்டுமென்ற நோக்க மற்று இருந்தது. வீரசாமிச் செட்டியாரும் மணிப்பிரவாள நடையில், நீண்ட வாக்கியங்க ளுடன் எழுதியபோதிலும், இவ ரது நடையில் குறிப்பிடத்தக்க அம்சமொன்றுண்டு. இவர் சொற்றொடர்களையும், பழமொ ழிகளையும் மிகுதியாகக் கையாண் டார்.

இக்கால கட்டத்தில்தான் இலங்கையில் நாவலர் தோன் றினர். நாவலரின் உரைநடை நூல்கள் மூன்றுவகையான உரை நடைகளைக் கொண்டிருந்தன. ஒன்று செந்தமிழ்நடை. இதற்கு அவரின் பெரிய புராணத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாகக் கொள்ளலாம். மற்றையது மணிப்பிரவாள நடை. பெரியபுராண வசனம் இதற்குதாரணமாகும். இன்னொன்று எளிய, இலகு நடை. இதற்கு ஆதாரம் திருவிளையாடற் புராணவசனமாகும். இவற்றைவிட இவரின் கண்டனப் பிரசுரங்கள் தனிவகையானவை. அவை ஆக்ரோஷமான நடையுடன் விளங்கின. இதனால்தான் நாவலர் மற்றையவர்களினின்றும் சிறந்து விளங்கினர். இது பற்றியே 19-ம் நூற்றாண்டின் உரைநடையின் தலையானவராக நாவலர் கணிக்கப்படுகின்றார். இவரைவிட இவர் காலத்தில் இலங்கையில் சி. குமாரசாமி முதலியார், கரோல் விசுவநாத பிள்ளை, ஆ. சதாசிவம்பிள்ளை என்பவர்களும் உரைநடை நூல்கள் செய்தனர்.

19-ம் நூற்றாண்டின் பிற் பகுதியில் புனைகதை வரலாற்றில் முக்கிய இடம் பெறும் இருவர் தமிழகத்தில் தோன்றினர். ஒருவர் 'பிரதாப முதலியார் சரித்திரம்' செய்த வேதநாயகம் பிள்ளை. மற்றவர் 'கமலாம்பாள் சரித்திரம்' செய்த இராஜமையர். பிரதாபமுதலியார் சரித்திரம் நகைச்சுவை நிறைந்தது. ஆனால் பிரசாரப்பான்மை மிகுதியாகக்காணப்படுகிறது. ஆனால் கமலாம்பாள் சரித்திரம் புனைகதையின் ஆதார சுருதியான உணர்ச்சி பேதத்தை அற்புதமாகக் காட்டியது. இதனால்தான் இந்நூல் முதல் நாவலிலக்கியம் என்றுஆய்வுரையாளரால் கணிக்கப்படுகிறது. இதே காலத்தில் இலங்கையில் 'திருகோணமலை சரவணப்பிள்ளை என்பவர் 'மோகனாங்கி' என்னும் நூலைச் செய்தார். தழுவலாக இருப்பினும் ஈழத்தின் புனைகதைத் துறைக்கு இதுவே முன்னோடி.

இக் காலகட்டத்தின் பின்னர் 'மாதவையா' என்பவர் 'பத்மாவதி' சரித்திரத்தைச் செய்தார். இதிலும் பிரசார நோக்கு இருப்பினும் கிராம, பட்டின பின்னணி அற்புதமாகப் பின்னப்பட்டிருந்தது.

20-ம் நூற்றாண்டின் முற்பகுதி இலக்கியக்காரர்கள் வரிசையில் பாரதி, வ. வெ. சு. ஐயர், மறைமலையடிகள். உ.வே சாமிநாதையர், திரு. வி. க. என்பவர் முக்கிய இடம் பெறுகின்றனர். இக் காலகட்டத்திலிருந்து இன்றுவரை எண்ணிக்கை அளவில் உரைநடை இலக்கியம் செய்யுள் இலக்கியத்தைவிட அதிகமாக உருவாகத் தொடங்கின என்று கூறலாம்.

இவர்களுள் 'பாரதி' சின்னஞ்சிறு அழகியவாக்கியங்களில் தனது கருத்தை வெளிப்படுத்தினர். உரை நடையிலும் பாரதிக்கு கவிதையைப் போல முக்கிய இடமுண்டு. 'பரமார்த்த குரு கதைகள், 'பஞ்சதந்திரக் கதைகள்,' 'மதனகாமராசன் கதைகள்,' 'விக்கிரமாதித்தன் கதைகள்,' என்பன சிறுகதைப் பான்மை உடையனவாகவிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் அவைகளைச் சிறுகதை நூல்கள் எனக் கொள்ள முடியாது. சிறுகதைப் பண்புகள் முற்றுக அவற்றில் காணப்படவில்லை. தமிழுக்குச் சிறுகதையை அறிமுகப் படுத்தியவர் வ. வெ. சு. ஐயர்தான். இன்றைய செழுமை அவரின் கதைகளில் இல்லாதிருப்பினும் தமிழ் சிறுகதை இலக்கியத்தின் முதல் மனிதர் அவரே

'மறைமலை யடிகள்' பலவகையான கட்டுரை நூல்களும், பல தமுவல் நவீனங்களும் செய்தார். அவர் தனித் தமிழ் நடையையே கையாண்டார். அவரது உரைநடை காலத்துக்கு ஒவ்வாததாக, நிலைக்கும் தன்மையற்றதாக இருப்பினும், தமிழில் பலவகை அறிவியல் நூல்களும் எழுத முடியும் என்பதை நிரூபித்து தமிழுக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்தார். பல அறிவியற் சொற்களை அறிமுகப் படுத்தினர்.

உ. வே. சாமிநாதையர் தமது இளமைக்கால நூல்களில் செந்தமிழைக் கையாண்டு பிற் பகுதியில் எளிய நடையில் எழுதினர். 'திரு. வி. க.' எளிய நடையில் ஆற்றொழுக்குப்போல எழுதினர். சொற் செட்டு மிக்க நடை அவருடையது.

இதே காலத்தில் இலங்கைச் 'சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர்' சிசுபால சரிதம், இரகுவம்சாமிர்தம், தமிழ்ப் புலவர் சரித்திரம் என்பனவற்றை எழுதினர் 'சிசுபால சரிதம்' எதுகைமோனைத்தொடைகளுடன் அமைந்து நடைக்குக் கவர்ச்சியைக் கொடுத்தது. மற்றும் 'முத்துத்தம் பிப்பிள்ளை' மணிப்பிரவாள நடையில் எழுதிய போதிலும் பொருட்தெளிவுடன் எழுதினர். பொருள் மயக்கமின்றி எழுத மணிப்பிரவாளம் அவருக்கு உதவியது. இதற்கு 'பாரதச் சுருக்கம்' உதாரணமாக நிற்கின்றது. சோமசுந்தரப் புலவரின் உரை நடைப் புனைகதையான உயிரிளங் குமரனின் பாத்திர வார்ப்பு சிறப்பானதாகும்.

அடுத்த கால கட்டத்தை 'மணிக் கொடிக் காலம்' என அழைப்பது பொருத்தமானது. முதற் சிறுகதையை எழுதியவர் என்ற பெருமை தனிப்பட வ. வெ. சு. ஐயருக்குக் கிடைத்த போதிலும், தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியுற்றது மணிக்கொடி எழுத்தாளர்களால்தான். அக்கால எழுத்தாளர்களான வ. ரா; கு. ப. ராஜகோபாலன், புதுமைப்பித்தன்; லா. ச. ராமாமிர்தம், தி. ஜ. ரங்கநாதன், மௌனி, ந. பிச்சமூர்த்தி கல்கி, பி. எஸ். ராமையா, கு. அழகிரிசாமி, க. நா. சுப்பிரமணியம் எனப் பலர் சிறுகதைத் துறையில் ஒரு புதுச் சகாப்தத்தை ஏற்படுத்தியதில் பெரும் பங்கு வகித்தனர்.

இவர்களுள் புதுமைப்பித்தனை 'சிறுகதையுலகின் பாரதி' என்று கூறினால் பொருத்தமாகவிருக்கும். வளமான கற்பனையும் புதுமையான நடையும், அழுத்தமான கருத்துக்களும், கனமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளும் அவரின் இலக்கிய வெற்றிக்குத் துணைநின்றன.

இலங்கையில் சிறுகதைத் துறையின் முன்னோடியாக 'இலங்கையர்கோன்' கருதப் படுகிறார். சி. வைத்தியலிங்கம் சம்பந்தன் ஆகியோர் பல சாதனைகளைப் புரிந்தனர்: 'இந்து சாதனம்' பத்திராதிபராக இருந்த திருஞான சம்பந்தன் பல புனைகதைகளையும், வாழ்க்கைச் சித்திரங்களையும் எழுதினார் கல்கியே இவரது எழுத்தாற்றலைப் பாராட்டியுள்ளார். நகைச் சுவையும், ஆற்றொழுக்கு நடையும் கொண்டு சுவைபட எழுதினார் இவர். இவரது எழுத்தாற்றலுக்குச் சிறந்த உதாரணம் 'ஓம் நான் சொல்லுகிறேன்' என்ற கதை.

20-ம் நூற்றாண்டின் பிற் பகுதியில் உரைநடையில் வேறும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. அறிஞர் அண்ணாத்துரை பேரா சிரியர் சேதுப்பிள்ளை மற்றும் தி. மு. க. அன்பர்கள் போன்றோர் எதுகைமோனையுடன் கூடிய ஓர் அடுக்குச் சொல்நடையைக் கையாண்டார்கள். இந்நடை சில இடங்களில் பொருத்தமற்றதாகவிருப்பினும் இது உணர்ச்சியூட்ட வல்லது. டாக்டர் மு. வரதராசனார், அ. ஞானசம்பந்தன், கி. வா. ஜகன்னாதன் ஆகியோர் ஒருவகை நடையைக் கையாண்டனர். இது கட்டுரை இலக்கியத்துக்கு ஏற்றது. ஆனால் மு. வவும், கி. வா. ஜவும் இதே நடையில் புனைகதைகளும் எழுதினர்.

அறிஞர் அண்ணாவும், டாக்டர் மு. வ. அவர்களும் தமது புனைகதைகளை எழுதுவதற்கு வெவ்வேறான நடையைக் கையாண்ட போதிலும் இருவரும் ஒரு நோக்கத்தில் ஒற்றுமைப் பட்டவர்கள். இருவரது நோக்கமும் தமது கொள்கைகளையும் நோக்கங்களையும் பரப்புவதற்கு புனைகதை ஒரு கருவி என்பதே. இதனால் அண்ணாவின் புனைகதை ஒரு அரசியற் சொற்பொழிவு போலமைந்தது. மு. வ. வின் கதைகள் கட்டுரைகள் போல மைந்தன. இவற்றால் அவர்களின் இலக்கியங்கள் இலக்கிய நீதியில் வெற்றியடையாவிடினும் (விற்பனை நீதியிலல்ல) அவர்களது நோக்கங்கள் வெற்றியீட்டின.

எண்ணிக்கையளவில் இன்று தமிழில் ஏராளமான அளவில் கதைகள் வெளிவருகின்றன. எழுத்தாளர்களும் அதிகமாக உள்ளனர். அவர்களுள் ஜெயகாந்தன், சுந்தரராமசாமி, சங்கரராம், தி. ஜானகிராமன் எம். வி. வெங்கட்ராமன், அகிலன், ராஜம் கிருஷ்ணன் எனப் பலரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இப்பொழுது என் இக் கட்டுரையின் மிக முக்கியமான கட்டம் ஆரம்பமாகிறது. இதுவரை உரைநடை இலக்கிய வரலாற்றில் ஈழத்தின் பங்கையும், தமிழகத்தின் பங்கையும் எடுத்துக் காட்டியிருந்தேன். இனிமேல் ஈழத்து இலக்கியத்துக்கும், தமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக இலக்கியத்திற்கு மிடையே காணப்படும் வேறுபாட்டையும் அதன் காரணங்களையும் கூறலாம் என எண்ணுகின்றேன்.

புனைகதையின் இரு பிரிவுகளான சிறுகதை, நாவல் என்பவற்றுள் இலங்கை நாவல் படைப்பில் மிகவும் குறைவான எண்ணிக்கையுடைய நூல்களையே அளித்திருக்கிறது. இதற்குரிய காரணம் இலங்கையின் இலக்கியச் சூழ்நிலைதான். ஈழத்தில் தனித்து இலக்கிய சேவை செய்யும் சஞ்சிகைகள் குறைவு. வெளிவருவது சிரமம். இதனால் இலங்கை இலக்கிய இரசனையில் பின்தங்கியுள்ளது என்று பொருளல்ல. தமிழ் நாட்டு இலக்கிய சஞ்சிகைகளில் வாசகர்கள் பெரிதும் ஈடுபாடு காட்டுகிறார்கள். இச் சூழ்நிலையில் நாவல்கள் வெளியிட எந்த இலக்கியாசிரியன் விரும்புவான்? அவை நிச்சயமாக விற்பனையில் படுதோல்வியையே அடையும். இதனாலேயே நாவல்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகக் காணப்படுகிறது.

இலங்கைப் பத்திரிகைகள் தொடர்கதைகளைப் பிரசுரித்தாலும் அவை பத்திரிகைகளின் கட்டுப்பாட்டுக்குள் சிக்கித் தமது நாவல் மரபையும், பண்பையும் அர்ப்பணித்து விட்டு குற்றுயிராகத்தான் வெளிவருகிறது.

இலங்கைச் சிறுகதைகளைப் பற்றி அண்மையில் தமிழகத்திலிருந்து ஒரு கருத்து வெளிவந்தது. அதாவது ஈழத்துச் சிறுகதைகள் வெறும் குணசித்திரங்களே, வெறும் வாழ்க்கைச் சித்திரங்களே என்று அதில் கண்டிருந்தது. ஓரளவுக்கு இதில் உண்மை இல்லாமலில்லை. ஆனால் இவ் வேறுபாட்டிற்குக் காரணமுமில்லாமலில்லை. இலங்கையின் இலக்கியாசிரியர்களின் பொருளாதார நிலையே இதற்குக் காரணமுமாகும்.

ஈழத்திலுள்ள எழுத்தாளர்கள் எழுத்தைத் தொழிலாகக் கொண்டவர்களல்ல. எழுத்தைத் தொழிலாகக் கொண்டு எவரும் இலங்கையில் வாழ வாய்ப்பும் இல்லை. இதனால் வேறு பதவிகளிலும், தொழிலிலும் ஈடுபட்டுள்ள எழுத்தார்வம் மிக்கவர்களே இங்கு சிறுகதைபடைக்கிறார்கள். தரமான இலக்கியங்களைப் படைக்கவேண்டும், உள்ளத்தைத் தொடும் வண்ணம் எழுதவேண்டும் என்ற ஆத்ம திருப்திக்காகத்தான் எழுதுகிறார்கள். இதனால் அவர்கள் கதையமைப்பு, ஆவலூட்டும் திருப்பம் என்பவற்றைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. நடை, உணர்ச்சியூட்டல், சமுதாய ஊழல்களை, கொடுமைகளை அம்பலப்படுத்தல், மனிதப் பலவீனங்களை, மன உணர்ச்சிகளை வெளிப்படுத்தல் ஆகியவற்றிலே அக்கறையைச் செலுத்துகின்றனர்.

ஆனால் தமிழக எழுத்தாளரில் பலர் எழுத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள். எழுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்மூலம் கணிசமான பணம் பெறும் வசதியுள்ளவர்கள். சஞ் சிகைகள் வாசகர்களின் இரச னைக்கேற்ப கதையமைப்பு, திருப் பங்களையுடைய கதைகளையே வெளியிட விரும்புகின்றனர். இதனால் அவர்களின் கதைகள் கதையமைப்பு, திருப்பம் ஆகிய வைகளையுடையவைகளாகஇருக் கவேண்டியது அவசியமாகிறது. இதனால் அவர்கள் மூலக்கதை யில் கவனம் செலுத்தவேண்டி யது அவசியமாகின்றது.

ஈழத்தில் இலக்கியம் படைப் பதற்கான சூழ்நிலையும் தமிழக இலக்கியச் சூழ்நிலையும் மிகுந்த வேறுபாடுடையன. இவ்வேறு பாடு இரு நாட்டு இலக்கியங்க ளிலும் பிரதிபலிப்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. இலக்கிய மென்பது சூழலைப் புறக்கணித்து எழுவதில்லையே! ஆனால் இக் காரணத்தால் இலங்கையின் இலக்கிய முயற்சிகள் தமிழகப் படைப்புகளைவிட தரங் குறைந் தவை எனும் கொள்கை தவ றானது.

ஈழத்தில் தினசரிகளின் வாரப் பதிப்புகள் ஓரளவு இலக் கிய சம்பந்தமான விடயங்களைப் பிரசுரிக்கும் நிலையைக் கொண் டுள்ளன. அண்மைக் காலங்க ளில் வாழ்க்கைச் சித்திரங்கள், நகைச்சுவைச் சித்திரங்கள் என் பனவற்றை எழுதுவதில் முன் னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

மொத்தத்தில் புனைகதை முயற்சிகளில் ஈழம் தமிழகத்தி லிருந்து தனித்து நிற்கிறது. ஆனாலும் ஈழத்துச் சிறுகதைக ளின் சாயலைக் கொண்ட பல சிறுகதைகள் தமிழ் நாட்டிலும் வெளிவருகின்றன. அச்சிறுகதை களை தமிழகத்தின் இலக்கிய சார்பு ஏடுகளான தாமரை, சரஸ்வதி, தீபம் கண்ணதாசன் என்பவற்றில் காணலாம். இதி லிருந்து என்ன நிரூபணமாகிற தென்றால் தமிழகத்தின் தனி இலக்கிய முயற்சிகளுக்கும் ஈழத் துச் சிறுகதைகளுக்கும் நெருங் கிய தொடர்பு காணப்படுவ தால் ஈழத்து சிறுகதைகள் இலக் கியத் தரமுடையன என்பது தான்.

இது ஒரு வழக்கறிஞனின் வாதம் போன்றதல்ல. சற்று சிந்தித்துப் பார்த்தால் யாவ ரும் இக் கருத்தை ஒப்புக்கொள் வர். உண்மையில் உரைநடை இலக்கியங்களான கட்டுரை, புனைகதை என்பவைகளில் இலங் கை தனித்துவமுடைய சிலமுயற் சிகளைச் செய்திருக்கிறது. அவை களுற் பல தரமிக்க இலக்கிய ஆக்கங்களுங் கூட என்பதை மறுப்பதற்கில்லை. எனவே கதைக்கு முக்கியத்துவம் கொ டுக்கும் போதுதான் தமிழகக் கதைகள் முன்னே நிற்கின்றன. இலக்கியத்தின் பயன் என்பதை அளவு கோலாகக் கொண்டு சீர்தூக்கின் எமது கதைகள் முன்னணியில் நிற்கும். இதில் எது சிறந்த இலக்கியம் என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள் ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோமியோ யூலியற் கதாவக்!

குருநகரோன்

இங்களத் திரையுலகில் 'லெஸ்ர'ரையடுத்துச் சிறப்பாகக் குறிப்பிடப்படுபவராகிய 'ஜி. டி. எல். பெரேரா' விடமிருந்து, நீண்ட நாட்களின் பின்னர் 'ரோமியோ யூலியற் கதாவக்' (ரோமியோ யூலியற் கதை) என்ற திரைப்படம் வெளிவந்திருக்கிறது. புராணிக அல்லது மிகப்பிரபலமான கதையொன்றினை எடுத்து அதன் மூலக் கதைப்போக்கினை, வேறுபட்ட களத்தில் இயங்குகிற வெவ்வேறு பாத்திரங்களின் மூலம் சித்தரித்துக்காட்டும் உத்தி, சில மேனாட்டுப் படங்களில் ஏற்கனவே கையாளப்பட்ட உத்தியேயாகும். 'ஒபியசும் யுரிடைசும்' என்ற கிரேக்க புராணக்கதையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட 'எபியஸ் நீக்ரே' என்ற அருமையான பிரான்சியப் படத்தினை இதற்கு உதாரனமாகக் காட்டலாம். 'ரோமியோவும் யூலியற்றினுமுடைய துயரங்கள்' என்ற செக்கோசில வேக்கியத் திரைப்படத்திலும் இவ்வுத்தியின் சாயலை ஓரளவுக்குக் காணலாம். தனது ரோமியோ யூலியற் கதாவக்கின் மூலம் ஈழத்துத் திரைப்படத் துறையிலும் இவ்வுத்தியினை, ஜி.டி.எல். பேரேரா அவர்கள் தொடக்கி வைத்துள்ளார்கள்.

தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் கடும் பகைவர்களாகியிருக்கும் 'அத்தனுயக்க' 'கஜநாயக்க' ஆகியோரின் மக்களான ரோமியோவும், யூலியற்றும் காதலர்களாகிறார்கள்; குடும்பப் பகையின் காரணமாக இக்காதல் பல இடைஞ்சல்களுக்குள்ளாகிறது. தேர்தல் தினத்தன்று வீட்டைவிட்டு இருவரும் ஓடிச்செல்ல முயன்றபோது, பின்தொடர்ந்த கஜநாயக்காவின் கையாட்களினால் கைக்குண்டு வீசப்பட கடலோரத்தில் ரோமியோ உயிர்துறக்கின்றான்; யூலியற் மயக்கமடைகின்றாள்; மயக்கந்தெளிந்துபார்த்தபோது ரோமியோ மரணமடைந்திருப்பதைக் கண்டு, கைத்துப்பாக்கியினால் தன்னைத் தானே சுட்டு இறந்துபோகிறாள். இருவரதும் பிரேதங்களை கடலலைகள் வந்து மோதிக்கொண்டே இருக்கின்றன. இத்துடன் படம் முடிவடைகிறது.

ரோமியோ, யூலியற் ஆகியோர்களது காதல்; இரு குடும்பங்களினதும் போட்டி; இறுதியில் நிகழும் துயரம் என்பன மூலக்கதையினைப் போல நன்கு ஆழம் பொருந்தியனவாகச் சித்தரிக்கப்படாததினால், எல்லாப் பாத்திரங்களுமே வலுவற்றவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகி விடுகின்றன. இவ் வலு வற்ற பாத்திர அமைப்புக் காரணமாக எந்த நடிக நடிகையினரதும் நடிப்பினைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாதிருக்கின்றது. ரோமியோவும் (டக்டஸ் ரணசிங்ஹ) யூலியற்றும் (மொனு மங்கலீ) சுமாராகத்தான் நடிக்கின்றனர். ஆனால் இருவருமே சாய்வுக் கோணங்களில் தோற்றங் கொடுக்கும்போது நன்கு நடித்திருக்கின்றனர். அதிலும் 'மொனு மங்கலீ'யின் துயரத் தோற்றங்கள் அருமையாக இருக்கின்றன. ஒரு கட்டத்தில் 'லியனுடோ டாவின்சி' யின் புகழ்பெற்ற 'மொனுலிஸா' வினை அவரது தோற்றம் நினைவுபடுத்துகின்றது. போதிய வாய்ப்பின்மை காரணமாக ஆற்றல்வாய்ந்தவர்களான 'பியதாச குணசேகர' (கஜநாயக்க) 'ஜராங்கனி சேரசிங்ஹ' (கஜநாயக்காவின் மனைவி) 'ஜோ. அபேவிக்கிரம' போன்றவர்களாற் கூட தமது நடிப்பினைச் சிறப்பாகக் காட்ட முடியாது போய்விட்டது ஏமாற்றத்திற்குரிய விடயம்.

திரைப்படத்தில் பொதுவாகப் பாராட்டும்படியாக இருப்பதே ஒளியமைப்பும், படப்பிடிப்பும்தான். சிறந்த ஒளியமைப்பின் காரணமாகக் காட்சிகள் நன்கு தெளிவாயிருக்கின்றன. ரோமியோவினதும், யூலியற்றினதும் சாய்வுத் தோற்றங்களைத் 'தனித்த போட்டோப் படங்களைப்போல' பெருமளவு காட்சிகளில் எடுத்திருப்பதானது, மிக அருமையாக இருக்கின்றது. சுமராவினைக் கையாண்ட கே. டி. தயானந்தா வினை நாம் நன்கு பாராட்டலாம். பின்னிசை அமைப்பினைக் 'ஷெல்ரன் பிரேமரத்ன' சுமாராகச் செய்துள்ளார்.

'ஜி. டி. எல். பெரேரா' நெறியாள்கையினைக் கையாண்டுள்ளார். ஒரு புதிய திரைப்படப் போக்கினை ஆரம்பித்து வைத்ததற்காக நாம் அவரைப் பாராட்டினாலும், திரைப்படத்தினை ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது நிறைவடைய முடியாது. கதைப்போக்கு, இன்னும் நன்றாகச் சித்தரிக்கப்பட்டிருக்கவேண்டும். பெருமளவான காட்சிகள் விரைவானதும், தொடர்ச்சியானதுமான இயக்கத்தினைப் பெறுதனவாகியுள்ளன. ஆரம்பத்தில் 'ஷேக்ஸ் பியரின்' மூலக்கதையினை நிழற்படங்களின் மூலம் பத்து நிமிடங்கள் விளக்குவதானதும், செய்திப்பட உணர்வை எழுப்புவதால் சலிப்புக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

மொத்தத்தில் சுமாரான படமென இதனை கூறமுடியும். ஆனால் 'சாமா' 'நிஹண்ட சுதாது' 'தஹசக் சித்துவிலி' ஆகிய திரைப்படங்களின் மூலமும்; 'கலா பெல' என்ற திரைப்படப் பயிற்சிக் கழகத்தின் மூலமும் குறிப்பிடத்தக்கவராகக் கருதப்படும் ஜி. டி. எல். பெரேராவிடமிருந்து ஒரு சுமாரான படம் வெளிவந்திருப்பதில் எமக்கு ஏமாற்றமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையின்

இரகசியம்

வதிரியூர் வன்னியன்

'எணே..... கேட்டுதே..... உதிலை முருகன் வீட்டை ஒருக் காப் போயிட்டு வாறன்.'

வீட்டுக்காரியின் பதிலுக்குக் காத்திராது அவளை அடுக்களை யுள் அவதிப்பட விட்டுவிட்டு சால்வையை உதறித் தோளில் போட்டுக் கொண்டு முருகன் வீட்டை நோக்கி நடக்கலா னேன்.

மூன்று மாதங்களின் பின் னர் இன்றுதான் கொழும்பிலி ருந்து ஊருக்கு வந்திருக்கிறேன். நாவு தவண்டையடிக்கிறது. நினைவுகள் பங்குனி மாதத்தைச் சுற்றிச் சுற்றிச் சுழல்கின்றன. மனதின் வேகத்தோடு கால்கள் ஒத்துப்போக இயலாமல் தவிக் கின்றன. போகும் காரியம் வெற்றியாக முடியவேண்டுமே என எண்ணங்களில் அங்க லாய்ப்பு எழுந்து புரள்கிறது.

தெருவில் இறங்கியபோது பொழுது நன்றாக இருண்டுவிட் டது. நிலவு இல்லாவிடினும் மேகம் வெளிப்பாக இருந்ததி னல் பாதை தெளிவாகவும், தெளிவில்லாமலும் கலங்கித் தெரிகிறது. வானத்து நட்சத் திரங்கள் இரவில் மனிதச் சேட் டைகளைப் பார்த்து இரசிப்பதற் காக ஒன்றுகூடி முன்கூடியே சிரிக்கத் தொடங்கியிருந்தன. மாலை வெள்ளியின் மங்கிய ஒளி யில் தட்டுத் தடுமாறி நடந்து சென்று முருகன் வீட்டை எட் டிவிட்டேன் பழக்கமான பாதை தானே! படலையைத் திறந்து கொண்டு முருகன் வளவுக்குள் காலடி எடுத்துவைத்தேன்.

வீட்டுத் தலைவாசலில் கை விளக்கொன்று எரியவோ விட வோ எனச் சிணுங்கிக்கொண்டி ருக்கிறது. பிளாவுக்குள் வைத்த வாயை வெளியில் எடுக்கமாட் டாது, எடுக்க மனமில்லாது அதனுடன் போரிட்டுக் கொண் டிருக்கிறார் ஒருவர். அந்த மங் கிய ஒளியிலும் அவருடைய குரும்பைக் குடுமி தெளிவாகத் தெரிகிறது. முன்னிலையில் பெண் ஒருத்தி- அவள்தான் நம்முடைய முருகன் பெண்சாதி - நாச்சிப் பிள்ளை - போத்தலும்கையுமாக அவர் பிளாவுடன் மல்லுப்பிடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதை வைத்தகண் வாங்காது பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

எனக்குச் சற்று ஏமாற்றமாக இருந்தாலும் வந்துவிட்டேனே என்பதற்காக அவர்களை நோக்கி நடக்கிறேன். அவர் வாயினின்றும் பிளாவுக்கு விடுதலை கொடுத்துவிட்டு என்னை நிமிர்ந்து நோக்குகிறார்.

'எங்கடை தம்பர் அத்தான் தான் இருக்கிறாரோ?' எனக் கோர் ஐமிச்சம்!

'வாரும்..... வாரும் முகத்தார். எப்ப வந்தனீர்.....? இருந்தாப்போலை, சொல்லாமல் கொள்ளாமல்! என்ன, காற்று இப்ப இந்தப்பக்கமும் வீசுதோ? காலமும் இனி அந்தக் காலமாப் போச்சு.....!'

தம்பர் நாணயமாகக் குசலம் விசாரித்தாலும் அவருடைய முகத்தில் இருந்தாற்போல் தோன்றிய மாற்றம் பளிச்செனத் தெரிகிறது.

'தம்பர் அத்தான்ரை முகம் ஏன் இப்படி வாடிப்போச்சு? சிவ பூசைக்குள் கரடி புகுந்து விட்டதே என்று சுவலைப்படுகிறாரோ?' எனக்குள் தோன்றி மறைந்த அந்த வினவுக்கு விடை காணுமுன்னர் அவருடைய குசல விசாரிப்புக்குப் பதில் சொல்லவேண்டுமே!

'ஓம் தம்பத்தான்..... இண்டைக்குத்தான் மத்தியான யாழ் தேவியிலை வந்தனான் சீ சீ சீ..... அருவருத்த பிரயாணம் கண்டியளோ! நிண்ட நிலையிலை ஒரு மாதிரி வந்து சேந்திட்டன். மனிசி சுகமில்லையெண்டு தந்தியடிச்சாள். அதைப் பாத்துப் போட்டும் அங்கை நிக்க மனம் வருமோ?' மனமறிந்த பொய் தான். இருந்தாலும் எல்லோரும் இந்தப் பொய்யைச் சொல்லப் பழகியிருக்கும்போது நான் மட்டும் ஏன் சொல்லக்கூடாது?

'அதுசரி, சுகமே இருக்கிறியளே அத்தான்?'

'அதுக்கென்ன குறைச்சல் முகத்தார்? பிறந்தாலும் என்னைப்போலைதான் பிறக்கவேணும்..... இல்லாட்டி வாழ்ந்துதான் என்ன.....?' என்னுடைய குடும்ப விஷயங்களும் தம்பத்தானுக்குத் தெரியும், ஒருவேளை அதைத்தான் குத்திக் காட்டுகிறாரோ?

'ஓம்..... ஓம்..... நானும் இண்டைக்குத்தானே கேள்விப் பட்டனான். மனிசி சொல்லத்தான் எனக்குத் தெரியும். உந்த வயசிலையும் நல்லொரு கண்ணிப்...கிடைச்சிருக்கண்டால், பிறகு பேசவேணுமே! பெட்டை எப்பிடி? எனக்கும் ஆளைச் சாடை மாடையாகத் தெரியும். எங்கடை கிட்டினிக் குஞ்சியப்பூன்ரை மோள்தானே?'

'பின்னை வேறை ஆரெண்டு நினைச்சீர் முகத்தார். அதுக்கெல்லாம் குடுத்து வைச்சுப் பிறக்கவேணும் கண்டியோ!'

தம்பர் அத்தான் குடும்பதாம்பாத்திய - வாழ்க்கையில் சுதி கண்டவர். அதிருஷ்டமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்பக்கம்தான் நின்று விளை யாடுகிறது. முதல் தாரத்தை மூன்று பிள்ளைகளோடு அவளு டைய தகப்பன் வீட்டுக்கு விரட் டிவிட்டார். அவளும், மிருகத் தோடு குடும்பம் நடத்துவதிலும் அந்த வாழ்க்கையே தேவையில் லையென்று நினைத்துக்கொண்டி ருக்கலாமென பிடிவாதத்துடன் இருக்கிறாள். பிள்ளைகளையும், தகப்பனை எட்டிப்பார்க்கக் கூட விடுவதில்லை.

முதலாந் தாரத்தைக் கைப் பிடிக்க முன்னரே இரண்டாந் தாரத்தைப் பார்த்து வைத்து விட்டார் தம்பர். எனவே, முத லாந் தாரம் வீட்டுக்குப்போன அன்றே அடுத்தவளை அவளின் இடத்தில் கொண்டுவந்து அமர்த் திக்கொண்டுவிட்டார். அவளும் தம்பரோடை வாழப்பிடிக்காது சுருக்குப் போட்டுக்கொண்டாள் என்று கதை! மரண அவஸ்தை யை அனுபவிப்பதற்கு நான் கைந்து நாளிகைக்கு முன்னர் அவள் கடித்துக் குதறிய காயத் தின் சுவடுகள் தம்பரத்தானு டைய வலதுகையில் இப்போ தும் காட்சிப் பொருளாயிருக் கிறது! அதற்கிடையில் மூன்றாந் தாரத்தையும் சேர்த்துக்கொண் டுவிட்டார். அதுவும் பத்தியப் படவில்லை!

'சரி சரி..... உனக்கும் வந்த அலுப்பு, புள்ளை நாச்சிப்பிள்ளை முகத்தாருக்கும் இரண்டைக் கொண்டுவந்து குடன். பாவம், களைச்சு வந்த பொடியன்!'

தம்பர் நாவால் பேசியது காணுதென்றோ என்னவோ, கண்ணாலும் ஏதோ பேசுகிறார். எனக்கு அவர்களின் 'பாஷை' கள் விளங்கினால்தானே!

நாச்சிப்பிள்ளை வீட்டுக்குப் பின்பக்கமாகச் சென்று கையில் ஒரு போத்தலுடன் திரும்பி வந்தாள். தம்பர் போத்தலை வேண்டினார். அவள் தன் கையை விடுவிக்கப் பட்டபாடு! ஆட்க ளுக்கு முன்னாலையுமே? 'சே! சே!' தம்பர் பிடியைத் தளர்த்திவிட் டுக் குங்குமச் சிவப்பேறிய அவள் கன்னங்களைப் பார்த்து இரசிக் கிறார்.

'தம்பத்தானுக்கு இன்னு மொண்டு வேணும்போலை.....!'

நான் சிலேடையாகத்தான் கேட்டேன். பின்னென்ன! இந் தக் கிழட்டு வயதிலும் உந்தச் சேட்டையென்றால்.....!

தம்பர் தலையசைத்தார். இன்னுமொரு போத்தல் வந்தது வேண்டிப் பக்கத்தில் வைத்துக் கொண்டார். நான் கேட்டது அவளுக்கு எங்கே விளங்கப்போ கிறது?

ஒரு போத்தல் கள்ளு முழு வதையும் பிளாவில் ஊற்றி, இருந்த 'தவண்டை'க்கு ஒரே மூச்சில் இழுத்துவிட்டேன்; மற் றப் போத்தலும் கிடைக்கு மென்ற எண்ணத்தில்!

'புள்ளை! வேறை கிடக்கே மோனை?' தம்பர் அவளுக்குக் கண்ணைக் காட்டிவிட்டுத் தலை யைச் சொறிந்துகொண்டார்.

'இல்லையாக்கும், அவர் உங்கடை வீட்டைதான் போன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர். இன்னும் இரண்டு பணை அங்கை நிக்குதாம். ஒருவேளை அங்கை போனால்.....!'

'ஓம் முகத்தார், ஒருக்கா என்ரை வீட்டைபோய்ப் பாரு மன்.' தம்பர் அத்தான் அவசரப்படுத்தினர்.

'சரி, எதுக்கும் ஒருக்கா அங்கை போய்ப் பார்க்கிறன். அப்ப வாறன் தம்பத்தான்.'

காசைக் கொடுத்துவிட்டுத் திரும்பினேன். தம்பத்தானின் முகத்தில் வெற்றிப் பெருமிதம் கவிநடம் புரிகிறது, என்னை வேலைக்கு அனுப்பிவிட்டேனென்று தம்பத்தானைப் பற்றி எனக்குத் தெரியாதே! ஆள் ஒரு கிழட்டுப் புலிதானே!

தம்பர் அத்தான் குடும்ப வாழ்க்கையிலிருந்து 'பென்சன்' பெறவேண்டிய காலப்பகுதியை எட்டிப் பிடிப்பவர், இருந்தும் அவருடைய பேச்சில் பேச்சின் பொருளில் இப்பவும் வாலிப மிடுக்கு இருக்கத்தான் செய்கிறது. நாற்பத்தொன்பது வயதுத் தம்பருக்கு இருபது வயது இல்லத்தரசியென்றால் அவருக்கு வாலிபம் திரும்பாமல் தான் என்ன செய்யும்?

தம்பர் அத்தான் வீட்டை நோக்கி எட்டி மிதித்தேன். நினைவுகள் குமிழியிட்டு வெடித்து வெடித்துச் சிதறிக் கொட்டுகின்றன.

'சே.....! என்ன சனியன் இது. படலை சாத்திக்கிடக்குது!' வெளியில் தலைநீட்டி நிற்கும் படலையின் கைப்பிடியைப் பிடித்து இழுத்துப் பார்க்கிறேன் ஓ.....! படலை உள்ளுக்குக் கட்டியிருக்கிறது. அப்ப.....!

'புள்ளோய்..... புள்ளை சிதம்பரம்!'

தம்பரின் இல்லத்தரசியைக் குரூட்டு நம்பிக்கையுடன் கூப்பிட்டேன், பதிலில்லை. 'ஒருவேளை, 'பெட்டை' என்னை ஆரெண்டு தெரியாமல்தான் பயத்திலை பேசாமலிருக்குதோ?

'புள்ளோய்..... புள்ளை சிதம்பரம்! நான்தான் அண்ணை முகத்தார் கூப்பிடுகிறன், நீ பயமில்லாமை வா!'

ஊஹூம்..... பதிலில்லைத் தான். ஊமையின் இசையாக தெளிவற்ற பேச்சுத் தொடர்கள் வீட்டினுள்ளிருந்து வெளிப்படுகின்றன. கதவை தட்டுகிறேன்.

'சரிதானே! நீ அங்காலை நில் நான் போய் ஆரெண்டு பார்த்துவாறன்!

அடிப்பாணைக் கள்ளாக என் மனதின் சிந்தனைகள் நுரைதள்ளிச் சீறிப் பாய்கின்றன. 'ஆராயிருக்கும் அது?'

வேலியால் எட்டிப் பார்க்கிறேன் சிதம்பரம் கொண்டை முடிந்து கொண்டு வருகிறாள்! சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக்கொண்டு படலையை அவிழ்த்துவிடுகிறாள். சிதைந்துபோன குங்குமப் பொட்டு வேர்வையில் வழிகிறது. முகமெல்லாம் அதன் நிறம் திட்டுத் திட்டாகக் கறை கட்டிக்கிடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எப்ப வந்தனீங்களண்ணே? நானும் அடுக்களைக்குள்ளை இருந்திட்டன். நீங்கள் கூப்பிட்டது கூட ஒண்டுங் கேட்கவில்லை. வாருங்கோவன் உள்ளுக்கு!'

'இண்டைக்குத்தான் புள்ளை வந்தனான் நீ இஞ்சை இருக்கிறியாம் எண்டு கேள்விப்பட்டன் அதுதான் ஒருக்காப் பார்த்திட்டுப்போகலாமெண்டு வந்தனான்' என்று கொண்டே அவளைத் தொடர்ந்தேன். கள்ளுக்கு வந்தனென்று சொல்ல வாய் கூசுகிறது.

புட்டுவத்தில் அமர்ந்து கொண்டே மடியில் சொருகி வைத்திருந்த சுருட்டொன்றை எடுத்துப் பற்றவைத்தேன்.

'அதுசரி புள்ளை, முருகன் இந்தப்பக்கம் வந்தானும்! தம்பர் அத்தான்தான் சொன்னார், எல்லாம் சீவிப் போட்டானே?' வாசற் படியில் கிடந்த 'ஏறு பெட்டி'யைப் பார்த்துக்கொண்டே கேட்டேன். சிதம்பரமும் அதைக் கவனித்துக் கொண்டாள்.

'ஓம் அண்ணை, இப்பதான் வந்தவன். அவனுக்குச் சீவிற நேரகாலங்கூடத் தெரியிறேல்லை பொழுது பட்டாப்போலையே சீவவாறது? வந்தவன் ஏறுபெட்டியைக் களத்திப்போட்டுட்டு 'வயித்தைக் கலக்குது அடிவளவுக்குப் போட்டுவாறன்' எண்டிட்டுப் போனவன்தான், இன்னம் ஆளைக் காணேல்லை. வந்திடுவான் கொஞ்சநேரம் இருங்கோவன்!'

மீண்டும் அவள் பார்வை ஏறு பெட்டியிலேயே சென்று நின்று தவிக்கிறது.

'சே.....! அவனுக்கு ஏறு பெட்டியை வைக்கிற இடங்கூட அவசரத்திலை தெரியேல்லை. எளிய சனியன்' என்று கொண்டே அதை இடக்கையால் எடுத்துத் தூர எறிந்தாள் சிதம்பரம்.

நடக்கவேண்டிய இடத்தில் நடவாமல் இருக்கிறது ஒன்று, நடக்கக்கூடாத இடத்தில் நடைபெறுகிறது இன்னொன்று; இரண்டையுங் கூட்டிப் பிரித்தால் வருவது ஒன்று - சமநிலைதான்!

எண்ணங்கள், கூரிய பாளைக் கத்தியின் வீச்சில் அகப்பட்டு அறுபட நீண்ட பெருமூச்சொன்றை இழுத்துவிட்டேன்.

ஓ.....! தம்பர் அத்தானும் வெற்றிப் பெருமிதத்துடன் சிரித்துக்கொண்டே உள்ளே நுழைகிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையெழுத்து

'குரு'

நண்பர்கள் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் நானும் பேசவேண்டுமாம். நான் மறுத்து விட்டேன். நான் மறுக்க, மறுக்க இவர்கள் பிடிவாதம் அதிகமாகி விட்டது. ஏதோ 'பிகு' செய்கிறேன் என்ற நினைப்பு இவர்களுக்கு. வேறு வழியில்லை - சரியென்று சம்மதித்து விட்டேன்.

பேச்சு என்றால் இதல்லவா பேச்சு என்று கூட்டம் வியக்கும் முறையில் வெழுத்துக்கட்டிவிட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டேன். பேச்சுக்கு எப்படியும் அரைமணி நேரத்துக்கு குறையாமல் ஒருமணி நேரம் வரை தேவைப்படும்.

ஏனென்றால் நான் பேசப் போகும் விஷயம் அப்படி. (ஹெவி சப்ஜெக்ட்) ஒரு வாரமாக தயார் செய்யும் படலம். எப்படி ஆரம்பிக்க வேண்டும், எப்படி முடிக்க வேண்டும், என்று எல்லாமே ரொம்ப நுணுக்கமாகத் திட்டமிட்டுக் கொண்டேன்; எடுப்பு - தொடுப்பு - முடிப்பு என்பார்களே அப்படி.

நான் பேசும் போது சபையில் ஒரே 'ஆஹா' காரம் கிளம்பவேண்டும்.

கரகோஷம் அடிக்கடி முழங்கவேண்டும்.

ஏன் முழங்காது?

பேசுவது பெரிய பிரம்ம வித்தையா என்ன?

கூட்ட நாளன்று, தலைவருக்கு அடுத்த பேச்சாளன் நான் தான். அதாவது தலைமையுரைக்குப்பின். சும்மா சொல்லக் கூடாது, கூட்டமும் நல்ல கூட்டம்தான். இருபத்தி ஐந்து முப்பது பேருக்குக் குறைவிருக்காது.

கம்பீரமாக எழுந்துபோய் மைக்கைப் பிடித்துக்கொண்டு (கை நடுக்கத்தையும் அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் மறைக்கலாம்) பேச ஆரம்பித்தேன்.

மதிப்பிற்குரிய தலைவரவர்களே! (மதிப்பாவது, மண்ணாங்கட்டியாவது. அடியேனை இந்த மைக்குக்கு முன்னால் மாட்டி விட்டதே மேற்படியான்தான்) அன்புமிக்க சகோதரர்களே! சகோதரிகளே.....! என்மனைவி நீங்களாக என்று சபையைக் கவரும் முறையில் சொல்லவேண்டுமென்று ஆசை. ஆனால் மனைவி கூட்டத்துக்கு வரவில்லை (இந்தக் கண்றாவியைப் பார்க்க மனைவி வேறு வரவேண்டுமா!) பார்க்கப் போனால் பெண்களும் கூடத்தான் ஒருவரும் கூட்டத்துக்கு வரவில்லை. இருந்தாலும் கூட்ட சம்பிரதாயம், முறை என்றிருக்கிறதே, அதையெல்லாம் விட்டு விட முடியுமா? எனக்குப் பேச வாய்ப்பளித்த அன்பர்கட்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்... (இந்த 'முதற்கண்' என்ற சொல்லைக் கவனித்தீர்களா - இது இப்ப லேட்டஸ்ட்)

நான் இன்று பேச எடுத்துக் கொண்ட விஷயம் என்ன வென்றால்.....

என்ன விஷயம் என்பது மறந்துவிட்டது.

ஒரு கனைப்பு-ஒரு செருமல்...

சே, என்ன இது! வார்த்தைகளெல்லாம் எங்கே போய் ஒடி ஒளிந்து கொண்டன!

கூப்பிட்ட குரலுக்கு என்ன, என்று கேட்கும் சொற்களும் - காலுக்குள்ளும், கைக்குள்ளும் கூடவே கிடந்து புரளும் வார்த்தைகளும் கூட அல்லவா கை கொடுக்காமல் அடம் பிடிக்கின்றன!

எத்தனை முறை செருமினேன் தனைத்தேன் என்பது நினைவில்லை.

கூட்டத்தில் யாரோ ஒருவன் என்னைப்பார்த்துச் சிரிப்பதுபோலத் தெரிகிறது.....

இவருக்கு ஏற்கனவே, பல் கொஞ்சம் உயரம். சே! சிரிக்கத்தான் செய்கிறான் மனுஷன்! லேசாக நடுங்கிக் கொண்டிருந்த கைகளும்கால்களும் தந்தியடிக்க ஆரம்பித்துவிட்டன.

கூட்டத்தினரை முட்டாள்களாக நினைத்துக் கொள்ள வேண்டும் என்று யாரோ ஒரு புத்திசாலி சொன்னதையும் ஞாபகப்படுத்திக் கொண்டேன். (என் பேச்சைக் கேட்க வந்தவர்கள், பின்னே பிரகஸ்பதிகளாகவா இருப்பார்கள்!)

அதுவும் கைகொடுக்கவில்லை

சே! சரக்கே இல்லாதவன்களெல்லாம் என்ன போடு போடறான்கள்!

உடம்பெல்லாம் 'குப்' பென்று வியர்க்கிறது!

ஏனய்யா சிரிக்கிறீர்கள்?- என் இடத்தில் நீங்கள் இருந்திருக்கவேண்டும், அப்ப தெரியும் உங்கள் சங்கதி!

இத்துடன் என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

ஒரே கரகோஷம்!

எனக்குத் தெரியும் 'இவனுக', கேவி செய்கிறான்கள் என்று அவ்வளவு விபரம் தெரியாதவனா நான்!

உங்களுக்குத் தெரியுமா, ஆனைனப்பட்ட சர்ச்சிலுக்கே ஆரம்ப நாட்களில் பொதுக் கூட்டங்களில் பேசமுடியாமல் கை, கால் உதறலெடுத்திருக்கிறது. ஆகையினாலே, இதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை ஒரேயடியாக நீங்கள் இளிக்க வேண்டாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் முகத்தைப் பார்த்தேன். அசடுவழிந்தது. நல்லா வேண்டும் மனுசனுக்கு, மாட்டேன் என்றேனே, கேட்டாரா!

ஆனால், ஒன்று - நீங்கள் என்னதான் சொல்லுங்கள் பேசுகிறதைவிட எழுதுகிறதென்னவோ, லேசான வேலைதான்!

எழுதியதை அடித்துவிட்டு வேறு எழுதலாம் - திருத்தி எழுதலாம் - பூராவையுமே தூக்கி எறிந்துவிட்டு புதிதாகத் திருப்பி எழுதலாம் - எழுத ஓடாவிட்டால், அன்றைக்கில்லாவிட்டால் இன்னொரு நாளைக்கு எழுதிக்கொள்ளலாம். பேச்சிலே முடியுமா ஐயா இது! மாட்டினால் மாட்டினதுதான், சுக்கினால் சுக்கியதுதான்.

ஆயிரம்தான் சொல்லுங்கள் எழுத்து எழுத்துத்தான்!

ஏதாவது எழுதுங்களேன், என்றார் நண்பரொருவர்.

ஓ! பேஷக.....!

எழுதுவது கம்பவேலையா என்ன? எதை வேண்டுமானாலும் எழுதலாமே!

கவிதையில் கை வைத்தேன்.

பட்டு வாங்கப் போனேன் ஒரு பாட்டு வாங்கி வந்தேன்.

இரண்டுவரி எழுதியதன்பின் யோசித்துப் பார்த்ததில் புதுக் கவிதைக்குத்தான் இப்படவெல்லாம் 'பாஷன்' என்று மனதுக்குப் பட்டது.

பூ...! இதென்ன பிரமாதம்! புதுக்கவிதையே எழுதிவிட்டால் போகிறது.

நினைத்ததும் வந்ததை
அணைத்ததும் நனைந்தது.....

சே! கவிதையாவது, கத்திரிக்காயாவது! கதைக்குத்தான் இந்த நாளில் 'மவுசு' எழுத்திலக்கியத்திலேயே 'கதை' தான் ராஜன்! எப்படி உங்கள் அபிப்பிராயம்?

ஆசாமிக்கு ஒன்றுமே ஓடவில்லை. மழுப்புகிறான் என்று நினைக்கிறீர்கள் நீங்கள்.

என்ன உலகமடா இது, தகுதியும் தரமும் தெரியாத சுத்தப் பொறுமை பிடித்த உலகம் தூ.....!

உண்மையைச் சொல்லுங்கள். எனக்குக் கதை எழுத முடியாதென்று நினைக்கிறீர்கள்'

இது ஜனநாயக காலம் அபிப்பிராய சுதந்திரம் எல்லாருக்கும் உண்டு. தாராளமாக உங்கள் அபிப்பிராயத்தை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால், நீங்கள் அப்படி நினைத்தால் அது ரொம்பப் பாவமான செயல். அநியாயமாக ஒரு எழுத்தாளனின் தன்மான உணர்ச்சியைப் புண்படுத்துகிறீர்கள்.

அட சரிதான்ய்யா, கதை எழுதவேண்டாமென்று உம்மையார் கையைப்பிடித்தது, கதையை எழுதுமேன் என்கிறீர்களா?

அதுதான் சொன்னேனே ஐயா, இன்றைக்கு 'மூட்' வரவில்லை, ஓடவில்லையென்று.

பின்னே ஏன் இந்த மனுஷன் இவ்வளவு நேரம் நம்ம கழுத்தை அறுக்கிறான் என்று நீங்கள் முணு முணுப்பது காதில் விழுகிறது.

உங்கள் தலையெழுத்து அப்படி அதற்கு நான் என்ன செய்யட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் இறக்கவில்லை

ராஜ ஸ்ரீகாந்தன்

★★★

ஏனம்மா இப்படிப் பாக்கறே?

சுவரில் சாய்ந்து கால்களை நீட்டி 'ட' வினைப்போல் அமர்ந்திருந்த தாயின்தோள்களில் பிஞ்சுக்கரங்களை வைத்து அழுத்தியபடியே கேட்டது அந்தக் குழந்தை 'சொல்லும்மா'

அவளிடமிருந்து எந்தப் பதிலுமில்லை. அவளை அப்படியே விழுங்கிவிடுவதைப்போல பார்த்துக் கொண்டிருந்தாள். கண்கள் கர கரத்தன. மூக்கில் நீர் கசிந்தது. அதனை முந்தானையால் துடைத்துவிட்டுக் கொண்டாள் என்ன நினைத்தாளோ தெரியவில்லை. குழந்தையை இழுத்து மார்போடு இறுக அணைத்துக் கொண்டு இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டாள். தாயின் அன்புப் பிடியில் குழந்தை திணறியது.

இவன் வளந்து ஆளாகி எமக்கெல்லாம் எப்போது சம்பாதித்துக் கொடுக்கப் போகிறானோ எத்தனையோ வருடங்களுக்குப்பின்பு நடக்கப்போவதை இன்றைக்கே கண்டுவிடத் துடித்தது அந்தத் தாயுள்ளம். அவர்களுக்குத்தான் எத்தனை விசித்திரமான எண்ணங்கள், கூற்பனைகள்.

தாயின் அன்புப் பிடியிலிருந்து மெல்ல நழுவிச் சென்றது குழந்தை. அது அவளுடைய ஏழாவது குழந்தை. எத்தனையோ சீமான்கள், செல்வந்தர்கள் ஆசைக்கொரு குழந்தை இல்லையேயென ஏங்கித் தவிக்கும்போது அடுத்தவேளை கஞ்சிக்கே ஆலாய்ப்பறக்கும் குடும்பங்களுக்கு மழலைச் செல்வங்களை அள்ளி அள்ளி வழங்கும் ஆண்டவனின் கொடுமையை என்னவென்று கூறுவது!

காலொடிந்த கதிரையென்றைக் காரைபெயர்ந்த சுவரிலே ஆதாரத்திற்காகச் சாய்த்து அதிலமர்ந்து பாடப் புத்தகமொன்றினைப் படித்துக்கொண்டிருந்தான் அவளுடைய மூன்றாவது பெண் ராஜி. தாயின் சிந்தனைகள் திசைமாறின.

'இவள்தான் வயதிற்கு வந்து இரண்டு வருடங்களாகி விட்டனவே. ஒரு நல்ல பையனைப் பார்த்து அவன் கையில் இவளை ஒப்படைத்துவிட்டுப் பேரப் பிள்ளைகளை தூக்கிக் கொண்டு பாடவேண்டும். நல்ல நல்ல கதைகள் சொல்லவேண்டும்' ராஜிக்கு மூத்த பெண்களிருவர் விவாகவயதினைத் தாண்டியும் கன்னிகளாக இருந்தனர். அந்தக் கணத்தில் சிந்தனையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்துக்கொண்டிருந்தவள் தாய் தன்னையே பார்த்தவண்ணமிருப்பதை உணருகிறாள்: மெல்ல எழுந்து தாயிருக்குமிடத்திற்குத் தயங்கியவாறே வருகின்றாள்.

'அம்மா' மிக மெதுவான சுருதியில் ஒலிக்கிறது குரல்.

'என்ன ராஜி?'

நாளைக்கு ஸ்கூல் பீஸ் கட்டணும். இல்லேன்னா பரீட்சை எழுத விடமாட்டாங்களாம். திக்கித் திணறியவாறு சொல்லி முடித்துவிட்டாள் ராஜி.

'அதற்கென்ன நாளைக்கே கட்டிவிடலாமே' மிகச் சுலபமாகச் சொல்லிவிட்டாள்; தங்களுடைய வறுமையினைப் பிள்ளைகளுக்குச் சொல்லக்கூடாதென்ற வரட்டுப் பிடிவாதம். ஆனால் இவற்றையெல்லாம் அறியமுடியாத வயதா ராஜிக்கு?

கால்களை மடக்கி கைகளை நிலத்திலூன்றி எழுந்தாள். மண் பானையை மூடியிருந்த அலுமினியக் குவளையை எடுத்து அதில் தண்ணீரை ஊற்றி இரண்டு மிடறு குடித்தாள். கடந்த சில வாரங்களாக அவளுடைய காலை ஆகாரம் அந்த ஒரு குவளை நீர் தான். சேலைத்தலைப்பை இழுத்து முக்காடிட்டுக் கொண்டாள். ஓட்டுக்கள் போட்ட பட்டுச் சேலை, அவளுடைய குடும்பம் நன்றுயிருந்து கொட்டுப்போன தற்குப் பட்டையம் கூறியது. கால்கள் புழுதியில் புதைய எங்கோ நிசல்வதற்குப் பத்தடி தூரம் நடந்திருப்பாள்,

'எங்கேடி போறே?' ராகவனின் தடித்த குரல் அவளைத் தடுத்தது. முகத்தைத் திருப்பி அவனைப் பார்த்தாள். கிறீச்சிடும் ஈசிச்சேரில் படுத்திருந்தான் கண்களிரண்டும் இரத்தச் சிவப்பேறியிருந்தன. அரையங்குல நீளத்திற்கு வளர்ந்திருந்தஉரோமங்கள் அவனுடைய அழகான முகத்தை அவலட்சணமாக்கியிருந்தது. ஒரு விநாடிதான் நின்றிருப்பாள். மறுவிநாடி தன்வழியைத் தொடர்ந்தாள்.

'போடி, எங்கேயாச்சும் போய்த் தொலையடி சனியன் சனியனே. நீ எப்போ போய்த் தொலைவியோ அப்பதாண்டி எனக்கு நிம்மதி' தொண்டை கிழியக்கத்திவிட்டு ஏதோ முணுமுணுத்தான்.

ராஜிக்கு மூத்தவளுக்கு நான்கு நாட்களாகக் கடுமையான காச்சல். மெலிந்து எலும்பும் தோலுமாகக் காட்சியளித்தாள். பெரிய பெண் அவளைத் தனது மார்போடு அணைத்துக் கொண்டு கசப்பு மருந்தினைப் பருக்கினாள். அது தொண்டைக் குழிக்குள் இறங்க மறுத்தது வாயின் வழியே வழிந்த மருந்தினைப் பழைய துணியொன்றினால் ராஜி ஒற்றியெடுத்தாள்.

வெய்யில் சுளீரென்று உறைத்தது. கால்கள் பின்னின முக்காட்டை நன்றாக இழுத்து விட்டுக் கொண்டாள். 'நாளையுடன் பதின்மூன்றாவது தவணை. நாளைக்கு எப்படியாவது அந்தப் பணத்தைக் கொடுத்தேயாக வேண்டும். ஒரு ஆயிரம் ரூபாயேனும் இன்றைக்குக் கிடைத்துவிட்டால் மீதி இரண்டாயிரத்தினையும் பிறகு பார்த்துக்கொள்ளலாம்.' எங்கெங்கோ சுற்றினாள், யார்யாரையோ கெஞ்சினாள். மாலைமங்கியது ஒரு ரூபாய் தானும் கிடைக்கவில்லை நன்றாக இருட்டிவிட்டது. தள்ளாடியபடியே வீட்டினை அடைந்தாள். ஹரிக்கேன் லாந்தரொன்று மின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னி, மின்னி எரிந்துகொண்டிருந்தது. ராகவனே வீட்டிலே காணவில்லை. இரண்டாவது பெண் காச்சல்வேகத்தில் ஏதோ பிதற்றினாள். அவளுக்கருகில் பெரிய பெண் படுத்திருந்தாள். பள்ளிக்குச் செல்லும் மூன்று குழந்தைகளும் பெரியபெண்ணைச் சுற்றிப் படுத்திருந்தன. லாந்தரினருகே கால்களை நீட்டிக்கொண்டு சரித்திரப் புத்தகமொன்றைப் படித்துக்கொண்டிருந்தாள் ராஜி. அவளுடைய தொடையிலே தலையைவைத்துத் தூங்கிக்கொண்டிருந்தான் கடைக்குட்டி.

'எங்கேமா போயிருந்தே?'

'அதெல்லாம் உனக்கெதுக் கடி பேசாமல் படுத்துக் தூங்கு' என்றைக்குமில்லாமல் ராஜியைக் கடிந்துகொண்டாள். ராஜி ஒன்றுமே கூறவில்லை. அருகிலிருந்த கிழிந்த பாயை இழுத்து அதில் குழந்தையை வளத்திவிட்டுத் தானும் படுத்துக் கொண்டாள்.

கடந்த சில வருடங்களாக ராகவனின் நடத்தையில் ஏற்பட்ட மாற்றம் எவ்வளவு தூரம் அந்தக் குடும்பத்தைப் பாதித்துள்ளது. எவ்வளவு அழகான, கிளிக்குஞ்சுகள் போன்ற குழந்தைகள். சீரான உணவின்றி, உடைகளின்றி வதங்கிப்போயிருக்கின்றன. ராகவன்தான் எத்துணை அழகானவன். இப்படிக் குரூபியாகிவிட்டானே. அவனுடைய பாதையைத் திருப்புவதற்கு அவள் எத்தனையோ முறைகளிலெல்லாம் முயற்சித்துவிட்டாள். அவளால் அவனைத் திருத்தவே முடியவில்லை.

மின்னிக் கொண்டிருந்த லாந்தர் எண்ணை இல்லாமல் அணைந்தது. திரியின் புகைச்சல் நமைச்சலான நெடியொன்றினைக் கொடுத்தது.

'இந்த இரவு விடிந்துவிட்டால் ராஜிக்கு ஸ்கூல் பீஸ் தர வேண்டும், டாக்டருக்கு மருந்துப் பணம் கொடுக்கவேண்டும் எவ்வளவோ சிக்கல்கள் ஆனால் நாளைக்கிருக்கும் பிரச்சினைகளுள் தலையானவை இவை. நாளைக்குத்தானே கடைசித்தவணையும் அந்த மூவாயிரம் ரூபாய், ஐயோ தலையே வெடித்துவிடும்போல இருக்கிறதே' ராகவனை வேலைக்குப்போவதை எப்போதோ விட்டுவிட்டான். அவன் திருந்திப் பழைய ராகவனாக மாறிவிட்டால் எப்படியாவது கடன்களையெல்லாம் அடைத்துவிடுவான் குழந்தைகள் இப்படித் துன்பப் படமாட்டார்கள். ஆனால் அவன் திருந்தவேண்டுமே.

அவனைத் திருத்துவதற்கு அவளுக்குத் தெரிந்தவழி இன்னும் ஒன்றேயொன்றுதான் பாக்கியாக இருக்கிறது. அதனையும் இந்த இரவிலேயே செயல்படுத்தத் துணிந்துவிட்டாள்.

'நான் இறந்தபின்பாவது அதனை நினைத்தாவது அவன் திருந்துவான். அவன் திருந்திவிட்டானேயானால் குழந்தைகளை நல்ல நிலையில் வளர்ப்பான் பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சி விளையாடுவான். அதுவே எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் போதும்: நான் இறந்தபின்பும் அவன் திருந்தாவிட்டால்... என் குழந்தைகள் அனுதைகள் ஆகிவிடுமே. இல்லவேயில்லை எனதுடன்பிறந்தோர்கள் அவ்வண்ணம் விடவே மாட்டார்கள் இப்போது அவர்கள் பாராமுகம் காட்டினாலும் நானிறந்த பின்பு குழந்தைகளை அனுதைகளாக விடவே மாட்டார்கள். அவர்களிடம் போதிய செல்வம் இருக்கிறது, நல்ல நிலையில் குழந்தைகளை வளர்ப்பார்கள்.'

இரண்டாவது பெண் ஏதோ பிதற்றியவண்ணம் புரண்டு படுத்தாள். அவளுக்காக டாக்டர் கொடுத்திருந்த தூக்கமாத்திரைகளடங்கிய சிறிய சிவப்புப் போத்தில் தலையணையருகேயிருந்தது.

இடதுகையை நிலத்தில் ஊன்றிச் சிறிது குனிந்து வலது கையினால் அந்தப் போத்தலை எடுத்தாள். சிறிதுநேரம் அதனை வெறித்துப் பார்த்தபடியிருந்தாள். ஒவ்வொரு குழந்தைகளாக விழுங்கிவிடுவது போலப் பார்த்துக்கொண்டு வந்தாள். கண்கள் கலங்கின. அவளால் வாய்விட்டு அழமுடியவில்லை. ஒவ்வொரு குழந்தைகளருகிலும் சென்றாள். பின்பு எல்லாக் குழந்தைகளையும் சுற்றிவந்தாள். எவ்வித சலனமுமின்றி ஈசிச்சேரை நோக்கிச் சென்றாள். அங்கே ராகவன் இல்லை. அவன் இப்போது எவள்வீட்டிலிருக்கிறானே அவளுக்குத் தெரியாது. ஈசிச்சேரைத் தொட்டு வணங்கினாள். அது கிறீச்சிட்டு அவளுக்கு ஆசி வழங்கியது:

'ஆண்டவனே நான் இறந்தபின்பாவது குழந்தைகளுக்கு நல்வாழ்வு கொடுத்து அவரையும் திருத்திவிடு' அவள் வாயிலிருந்து வந்த இறுதிச் சொற்கள் இவை. மௌனமாகப் போத்தலின் மூடியைத் திருகித்திறந்தாள். அத்தனை மாத்திரைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக விழுங்கினாள். சிறிது நேரத்தின் பின் படுத்தாள், தூங்கினாள். தூக்க மாத்திரைகள் அவளை நிரந்தரத் தூக்கத்திலாழ்த்திவிட்டன, உலகத்தார்க்கு அவள் இறந்துவிட்டாள். ஆனால் அந்தக் குழந்தைகளின்உள்ளத்தில் அவள் வாழ்ந்துகொண்டேயிருப்பாள்.

ராகவனின் உள்ளத்திலும் அவள் வாழக்கூடும்.

ரசிகன்: (பிடில் வித்வானிடம்) 'நாளைக்கு நம்ம வீட்டுக்கு சாப்பிட வந்துடுங்க - இன்னொரு விஷயம் - வர்றபோது பிடிலையும் கொண்டு வாங்க'

வித்வான்: 'ஆனால், என் பிடில் சாப்பிடாதே'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புது மாதிரியான கலை

பேராசிரியர் வி. கொமார்

கலைகள் வளர்வதற்குத் தொழில் நுட்ப முன்னேற்றம் எப்போதுமே துணை புரிந்து வந்துள்ளது. கலைகளின் வரலாற்றிலிருந்து இதனைத் தெரிந்து கொள்ளலாம். அச்சு எந்திரம் கண்டுபிடிக்கப் பட்டதால் இலக்கியம் புது உத்வேகத்துடன் வளர்ந்தது. திரைப்படத் துறை சில சிறந்த கலைஞர்களை உலகுக்கு அளித்தது. தொலைக்காட்சி நவீன தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய கலைப் பாணியைத் தோற்றுவித்தது.

ஹோலோகிராபி கலை விஞ்ஞானத்துக்கேகூட புதுமையான ஒன்றாகும். ஆராய்ச்சிக் கழகங்களிலிருந்தும் ஆய்வுகூடங்களிலிருந்தும் இப்போதுதான் இது வெளிவந்துள்ளது. ஆயினும் அதற்குள்ளாகவே கலை ஊழியர்களை இது வெகுவாகக் கவர ஆரம்பித்துவிட்டது. எதார்த்தத்தைச் சித்திரிப்பதற்கு இந்தப் புதிய முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. 'தத்ரூபக்காட்சி உணர்வை' ஏற்படுத்த இது உதவுகிறது. ஏதாவதொரு கலைப் பொருளை நாம் நுணுகி ஆராயும்போது அதனை வெறுமனே உற்று நோக்குவதற்குப் பதிலாக பல்வேறு அம்சங்களிலிருந்து, வெவ்வேறு கோணங்களிலிருந்து, தூரங்களிலிருந்து, ஒளி மாற்றங்களிலிருந்து அதனைப் பரிசீலனை செய்ய முற்படுகிறோம். இந்தப் பரிசீலனையின்போது பொருள்களுக்கிடையே உள்ள இயல்பான தூரங்களைக் காணுவதற்குக்கூட ஹோலோகிராபி நமக்கு உதவுகிறது. இவை மிக முக்கியமான அனுகூலங்கள் என்பதில் ஐயமில்லை. எனினும் படைப்புக் கலைஞன் இவற்றை எப்படிப் பயன்படுத்துவது? அநேகமாக தொலைக்காட்சியைப் போன்று ஆரம்பத்தில் ஹோலோகிராபியைப் பயன்படுத்த முடியும்.

தொலைக்காட்சி தோன்றிய கணம் முதலே அது குடும்பக் கட்டுக்கோப்பின் ஒரு பிரிக்க முடியாத பகுதியாகி விட்டது. தொலைக்காட்சிப் பாத்திரங்களுடன் மனம்விட்டுப் பேசவும், தாம் நினைப்பதை அவர்களிடம் கூறவும் விரும்பும் மக்கள் பலர் இன்று இருக்கின்றனர். இந்நிலையில் தொலைக்காட்சிக் கதாநாயகன் திரையிலிருந்து வெளிப்பட்டு உங்களுடன் சேர்ந்து உட்கார்ந்தால் என்ன நேரும்? உங்கள் குடித்தனப் பகுதி அவன் செயல்படும் இடமாக மாறினால் எப்படி இருக்கும்?

கதாநாயகன் திரையிலிருந்து வெளிப்பட்டு சபையோர் அமர்ந்திருக்கும் மண்டபத்துக்குள் செல்லும் சாத்தியக்கூறுகள் திரைப்படக் கலையையும் கவர்ந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திழுக்கவே செய்யும். திரைப் படக் கலையில் ஹோலோகிராபி ஒரு புரட்சியை உண்டு பண்ணும் என்றே தோன்றுகிறது. ஹோ லோகிராபி ஈடு இணையற்ற ஓர் அற்புதக் காட்சியாக இருக்கும். இது தனக்குரிய சொந்த விதி களைக் கொண்ட ஒரு புதுமாதி ரியான கலையாக விளங்கும். ஹோலோகிராபியால் திரைப் படக் கலை பாதிக்கப்படுமா? அப் படிப் பாதிக்கப்படும் என்று தோன்றவில்லை. அதற்குப் பதில் இன்று திரைப்படக் கலையும் நாடகக்கலையும் இருப்பதுபோல இவை இரண்டும் இருக்கமுடியும்

ஓவியக் கலைஞன் ஹோலோ கிராபிக் 'தூரிகை' யைப் பயன் படுத்துவதற்கு இன்னும் அதிக காலம் பிடிக்கலாம். பொதுப் படையாகக் கூறினால், ஒரு பொருளை அப்படியே துல்லிய மாகச் சித்தரிப்பது கலையின் வேலையல்ல. படைப்பாக்க முயற்சி என்பதற்கு வெறுமனே சித்தரித்தல் என்று பொருள் ஆகாது. அகத் தூண்டலிலிருந்து பிறக்கும் புதிய வடிவங்களைச் சித்தரிப்பதே படைப்பாக்க முயற்சியாகும். இவ்வகையில் அசாதாரணமான கலைப்படைப் புக்களை உருவாக்குவதற்கு ஓவி யக் கலைஞனுக்கு ஹோலோகி ராபி மிகுந்த வாய்ப்புக்களை வழங்குகிறது. இதில் களிமண், உலோகம், ஓவியம் வரையும் திரைச்சீலை ஆகியவற்றின் இயல் புகள் முக்கியமல்ல; படைப்புக் கலைஞனின் கற்பனை வளமும் அவனது பாணியுமே முக்கிய மாகும்.

கவின் கலைகளில் ஹோலோ கிராபியை எம்முறைகளில்பயன் படுத்தலாம்என்பதை இப்போது கூறுவது சடினம். எனினும் இதன் மூலம் ஒரு முக்கிய பிரச் சினைக்கு விரைவிலேயே தீர்வு கண்டுவிட முடியும். ஓவியங்களை யும் சிற்பங்களையும் பேணிக்காக் கும் பிரச்சினையை, காட்சிக்கு வைக்கும் பிரச்சினையையே இங்கு குறிப்பிடுகிறேன். ஹோலோகி ராபியின் துணைகொண்டு மைக் கேல் ஏஞ்சலோ போன்றோரின் சிற்பங்களை வீடுகளில் வைப்பது சாத்தியமாகும். ஆயிரக்கணக் கான கிலோமீட்டர்களுக்கு அப் பால் பொருட்காட்சிக் கூடங் களிலுள்ள அவற்றின் மூலப் படி வங்களுக்கு முற்றிலும் ஒத்த முறையில் இவை இருக்கும். இதற்குமுன்னர் என்றும் காட் சியில் வைக்கப்பட்டிராத பல கலைப்படைப்புக்களுக்கு இது புது வாழ்வு அளிக்கும். மாஸ்கோ, பாரீஸ் போன்ற மாநகரங்களி லுள்ள கலைப்பொக்கிஷங்களை உலகெங்கணும் லட்சோப லட் சக் கணக்கான மக்கள் எளி தில் கண்டு அனுபவித்து இன் புற முடியும். மகோன்னதமான பல அரிய சிற்பங்கள் இல்லங்க ளையும் தொழில்கூடங்களையும் அலங்கரிப்பது சாத்தியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத்

1911 - இல் வெளியிடப் பெற்ற பிரித்தானிய கலைக் களஞ்சியத்தின் பதினேராவது பதிப்பில் உலகச் சிறுகதை மன்னன் அன்ரன் செக்கோவைப் பற்றி எழுதப்பட்டுள்ள ஒரே யொரு வாசகம் இதுதான்:

சிறுகதைப்

'...ஆயினும் அ. செக்கோவ் என் பவருடைய சிறுகதைகள் மிகவும் சக்திவாய்ந்தவையாகக் காணப் படுகின்றன..... ' மேற்கு ஐரோப்பிய இலக்கியப்பாணிக்கு முற்றிலும் வேறுபட்ட வகையில் மனம் விட்டுச் சொல்வதாயின்

பாங்கினிலே

அதி உன்னதமான முறையில் சோவியத் சிறுகதை இலக்கியம் வளர்ந்துகொண்டிருக்க, அதைப் பற்றி மே. ஐரோப்பா அறிந் திருந்தது இவ்வளவுதான்.

வே. சு. மணியம்

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி யில்தான் ரஷ்ஷிய இலக்கியத்தை ஐரோப்பா அறியத்தொடங்கி யது. மெல்குவா தீ வோகே என்ற பிரெஞ்சு எழுத்தாளர் 1886-ல் 'இலா ரூமான் ரூசே' என்ற நூலை வெளியிடும்வரை ரஷ்ஷிய இலக்கியம் ஐரோப்பிய இலக்கியத்தில் எவ்வித தாக்கத் தையும் ஏற்படுத்தவில்லை என்று சோமசெற்மோகம் சொல்கிறார்.

ஆனால் இப்பொழுது காலம் மாறிவிட்டது. சோவியத் நாவ லாசிரியர்களையோ, சிறுகதை எழுத்தாளர்களையோ எடுத்துக் காட்டாகக்கொள்ளாத ஐரோப் பிய எழுத்தாளர் எவரும் இல்லை கேவலம், சோவியத் எழுத்தா ளர்களைப் பின்பற்றும் அமெரிக்க எழுத்தாளர்களைக்கூட இனங் கண்டுகொள்ள முடியும். 'இலக் கியம் பற்றி' என்ற தமது விமர் சன நூல் ஒன்றில் சோமசெற் மோகம், கதறின் மான்சுபீல்டு செக்கோவைப் பின்பற்றியே பல சிறுகதைகளை எழுதியுள்ளதாக வாதாடுகிறார். ஆயினும் சோம செற் மோகத்தில் தோல்ஸ் ரோயின் தாக்கம் காணப்படு வதை அமெரிக்க வாசகன் மறுப்பதற்கில்லை; அவருடைய 'மழை' என்ற கதைக்கும் தோல் ஸ்ரோயுடைய 'இரண்டு பெரிய வர்கள்' என்ற கதைக்கும் நெருங்கிய தொடர்பு இருக் கிறது.

'பறவை ஒன்று சும்மா பாடுவதைப்போல மிக இலகு வாக நான் கதை எழுதுகிறேன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று செக்கோவ் ஒருமுறை சொன்னார். அவருடைய சிறு கதையிலே பாட்டாளிதான் பாத்திரம். தோல்ஸ்ரோயின் அன்னா கரீனினாவைப்பற்றி அவருக்கு எழுதத் தெரியாது. புதுமைப்பித்தனைப் போல வறுமைச் செல்வம் நிறையப் பெற்றவர். வைத்தியருக்குப் படிக்கக் கிளம்பியவர். செலவுக் காசுக்காகக் கதை எழுதுவதற்குக் குந்தியவர். வைத்தியராயிருந்தும் எழுத்தாளராகவே உலகுக்கு அறிமுகமானவர். செக்கோவுடைய வாழ்க்கையிலும் கதையிலும் நகைச்சுவை கண்சிமிட்டிச் செல்வதைக் காண்கிறோம்.

'இந்தச் சண்டை - முதல் உலகப்போர் - எதில்போய் முடியும்?' என்று ஒரு சீமாட்டி செக்கோவைக் கேட்டாள்.

'நிச்சயமாகச் சமாதானத்தில்தான் முடியும்' என்று சலிப்புடன் பதில் சொல்லிவிட்டு மறுபுறம் திரும்பினார்.

'விசயங்களை விபரித்துவிட்டு, அவற்றைப் பற்றிய முடிவுகளை வாசகனையே எடுத்துக்கொள்ள விட்டுவிடுவதுதான் எழுத்தாளனின் வேலை' என்று நாவலாசிரியர்களை ஒருமுறை செக்கோவ் அறிவுறுத்தினார். பிரச்சனைகளை விளக்கினார். தீர்வையோ தீர்ப்பையோ வழங்கவில்லை. இதே கருத்தைத்தான் புதுமைப்பித்தன் கொண்டிருந்தார்: '...இவை யாவும் கலை உதாரணத்துக் கென்று கங்கணம் கட்டிக்கொண்டு செய்த சேவைகள் அல்ல..... உலகை உய்விக்கும் நோக்கமோ, கலைக்கு எருவிட்டுச் செழிக்கச் செய்யும் நோக்கமோ எனக்கோ என் கதைகளுக்கோ சற்றும் கிடையாது...' என்று 'காஞ்சனை' சிறுகதைத் தொகுதிக்குக் கொடுத்த 'எச்சரிக்கை' யில் எழுதுகிறார். செக்கோவ் எழுதியவை ஏறத்தாழ முன்னூறு கதைகள். அதில் ஒவ்வொன்றிலும் குடியானவனே காட்டப்படுகிறான். 'செரிப் பழத்தோட்டம்' என்ற நாடகத்தில் பழைய பிரபுவர்க்க சமுதாயம் ஒன்றின் அழிவையும் புதிய பாட்டாளி வர்க்க சமுதாயத்தின் மலர்ச்சியையும் படம் பிடித்துக் காட்டுகிறார். அவருடைய ஒவ்வொரு எழுத்தும் ஈட்டிகொண்டு குத்துவது போல இருக்கும். 'குடியானவர்' என்ற கதையின் முடிவில் பின் வருமாறு எழுதுவார்:

'சின்னக் கொட்டில் ஒன்றைக் கட்டிவிட்டு, குடியானவனைக் குடித்து வெறிக்கச் செய்வது யார்? குடியானவனே. பணத்தை எல்லாம் குடியில் செலவழிக்கச் செய்வது யார்? குடியானவனே. அவனுடைய அயலவனது வீட்டில் திருடுவதும், உடைமைகளுக்குத் தீ வைப்பதும், ஒரு போத்தல் மதுவுக்காக நீதிமன்றத்தில் பொய்ச் சாட்சியம் சொல்ல வைப்பதும் யார்? குடியானவனே. சமூகத்தில் குடியானவனைத் தாழ்த்தி இழிவுபடுத்துவது யார்? குடியானவனே' இவ்வாறான ரஷ்ஷியச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயச் சீரழிவுகளைத் துடைத் தெறியப் புரட்சி ஒன்று வெடிக்க வேண்டும் என்று செக்கோவ் விரும்பினாரா, இல்லையா என்ப தைப்பற்றிய கவலை எமக்குத் தேவையில்லை. ஆனால், சோம செற் மோகம் சொல்வதுபோல ஏழையின் அறியாமையைப் பற் றியும், ஊழலைப் பற்றியும், வறுமையைப் பற்றியும், பணக் காரனின் மிருகத்தனத்தைப் பற்றியும், திமிரைப் பற்றியும் அவர் எழுதியதை வாசிக்கும் போது, இவற்றையெல்லாம் அழித்தொழிக்கப் புரட்சி ஒன்று வெடித்துக் கிளம்ப வேண்டும் என்ற எண்ணம் எமக்கு ஏற்ப டாமலிருக்க முடியாது.

நவீன சோவியத் சிறுகதை இரண்டாவது உலகப்போரோடு மலரலாயிற்று. போர்க் களங் களுக்குப் பத்திரிகை நிருபர்க ளாக அனுப்பப் பட்டவர்கள் சண்டைக் காட்சிகளை வெறுஞ் செய்திகளாகவல்லாது சிறிய கதைகளாக எழுதி அனுப்பினர். மக்களுக்கு நாட்டின் உணர்வை யும், போர் வீரர்களுக்கு வீரா வேசத்தையும் ஊட்டவல்ல சிறு கதைகளாக அவை மாறிக் கொண்டிருந்தன. 'ஜேர்மன் நாசிகளின் அட்டகாசம் கூடக் கூட சோவியத் சிறுகதையின் தரமும் வளர்ந்துவந்தது' என்று ஓர் ஆங்கில ஆசிரியர் எழுது கிறார். புதிய சோவியத் சிறுகதை இலக்கியத்தில் உள்ள ஆரம்ப கிறுகதைகள் போர்க் காட்சி களை அடிப்படையாகக் கொண் டிருப்பதற்கு இதுவே காரணம். சோவியத் எழுத்தாளர்களில் பலர் ஆரம்பத்தில் பத்திரிகை நிருபர்களாக இருந்தவர்களே. மசாக், இலியனோவ், சிமோ னோவ், செலக்கோவ், சொ பொலோவ் திகோனோவ் போன் றோர் நிருபர்களாக இருந்து எழுத்தாளர்களாக வந்தவர்கள் தனது காலத்தில் நாவலாசிரியர் களாகவும், நாடகாசிரியர்களா கவும், கவிஞர்களாகவும், நிரு பர்களாகவும், பத்திரிகையாள ராகவும் தொளாயிரம் பேர் ரஷ்யாவில் இருந்ததாகத் தோல் ஸ்ரோய் எழுதுகிறார்.

சோவியத் சிறுகதைக்கு யதார்த்தப் பண்பைக் கொடுத் தது போர், சித்தரிப்புத் திறனை வழங்கியது போர், கற்பனை வளத்தைத் தந்தது போர். அதுதான் சிலருக்கு சோவியத் இலக்கியம் ஒரே 'போராக' இருக்கிறது போலும். இவர்கள் 'சோவியத் இலக்கியத்தில் சண் டையைத் தவிர வேறென்ன இருக்கிறது?' என்று கேட்கும் பேர்வழிகள்.

சோவியத் போர்வீரன் ஒரு வன் தவுசென்கோவின் சிறு கதை ஒன்றினைப் படித் துவிட்டு, அதை வெளியிட்ட பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழு துகிறான்:

'தவுசென்கோவை வாசித் தபின் எனக்கு அதிக வலிமை யும், இலக்குவைக்கும் திறமை யும் ஏற்பட்டுள்ளன. ஜேர்மா னியன் ஒருவன் இப்போது என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்முன் தென்படுவானுயின், அவன் சவமாக வேண்டியது தான்...'

பிராவ்தா, இஸ்வெஸ்தியா செவ்வெள்ளி, செம்படை முதலிய பத்திரிகைகள் போர்க்களக் கதைகளுக்கு முதலிடம் கொடுத்துப் பிரசுரித்தன.

'யதார்த்தம்..... யதார்த்தம்' என்று எழுத்தாளர்களும் வாசகர்களும் பேசிக்கொள்வது இப்பொழுது ஒரு மரபாகிவிட்டது - புதிய பாங்காகிவிட்டது. எவ்வித பாகுபாடுமின்றி வலது சாரி, இடதுசாரி அரசியல் வாதிகள் 'சோசலிசம்' பேசிக்கொள்வதைப் போலத்தான் இதுவும். இந்த யதார்த்த விசயத்தைச் சோவியத் இலக்கியத்தில் பரக்கக் காணலாம். இதை வைத்து 'சோவியத் எழுத்தாளனிடம் கற்பனை வரட்சி உண்டுபோலும்' என்று சிலர் தமக்கு வசதியாக மட்டுக்கட்டி விடுகின்றனர். உண்மையில், கற்பனை - யதார்த்தம் எனப் பிரித்துக் கட்சிகட்டிப் பேசுவது பொருத்தந்தானு, எனக் கேட்கத் தோன்றுகிறது. ஏனென்றால், கற்பனை ஊற்றுச் சுரக்கும் எழுத்தாளனுல்தான் ஒரு யதார்த்த அம்சத்தை உயிர்க்களை ததும்பச் சித்தரிக்க முடியும். 'கிழவி இசெர்கில்' என்ற கதையில் மாக்சிம்கோர்க்கியின் கைவண்ணத்தைப் பார்க்கலாம்.

'...ஒருவன் என்னை அடைவதற்கு முயன்றான். ...மூட்டையை எடுத்து அவிழ்த்து என் தலைமேல் கொட்டினுன். தங்க நாணயங்கள் என் தலையில் பட்டுச் சிதறின... ஆயினும் அந்தச் சமயத்தில் நான் வெளியே துரத்தி விட்டேன். ஒரேயடியாகக் கொழுத்து, ஈரித்த முகமும் பெரிய திண்டுத் தலையணையைப் போல ஊதிய சால் வயிறும் கொண்டவன் அவன். திருப்தியாக இரையெடுத்த பன்றி போலிருந்தான்.....'

இவ்வாறு கோர்க்கி தன் கற்பனையில் எழுந்த கருத்தைச் சித்தரிக்கிறார்.

'யதார்த்த வாதம் முற்போக்கு இயக்கங்களினதும் கொள்கைக் குரலாக நிலைத்துள்ளது' என்று றேமண் வில்லியம்ஸ் கூறுகிறார். இம்மையில் இன்பத்தைக் காண வக்கற்றவர்கள், அதை மறுமையில் காணத்துடிப்பதை நாம் அறிவோம். இவர்கள் சமயவாதிகள். இவர்களும் எழுத்துலகத்துட் புகுந்துவிடுகிறார்கள். தமிழ்ச் சிறுகதை உலகில் இவர்களை வணங்கும் வாசகர்கள் இருக்கிறார்கள். யதார்த்தமாகக் கதை எழுதத் தெரியாதவர்கள், யதார்த்தவாதத்தை முறியடிக்க முடியாதெனக் கண்டதும், தம்மையும் யாதார்த்தவாதிகள் என்று அழைக்கிறார்கள். உண்மையில் யார் யதார்த்தவாதி? க. கைலாசபதி தமது 'தமிழ் நாவல் இலக்கியம்' என்ற விமர்சன நூலில் இதற்குப் பதில் தருகிறார்; 'சமுதாய இயக்க விதிகளையும் எதிர்காலச்சமுதாயவளர்ச்சிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் நன்கு விளங்கிக்கொண்டு, அவ்வுணர்வுடன் குறிப்பிடத் தக்க பாத்திரங்களே மெய்மை யுடன் சித்தரிப்பவனே யதார்த் தவாதி' மௌனியைக் க. நா. சு. தூக்கிப்பிடிக்கிறார். இரகு நாதனைக் கீழே போடுகில், மௌனியை அவர் கொண்டா டவேண்டும் போலும். 'மௌனி கதைகள்' முதலாவது தொகுப் பில் பதினேழு கதைகள் இருக் கின்றன. ஒரே கதையைத் திரும்பத் திரும்பப் பதினேழு தடவைகள் எழுதியுள்ளதாகத் தோன்றுகிறது. யதார்த்தம் என்பதற்கு மௌனியுடைய அக ராதியில் இடமில்லை. அவர் எழுதியதுவாசகனுக்கு விளங்கா விடினும் பரவாயில்லை, அவ ருக்கே விளங்கியதா என்பது தான் பிரச்சனை. அவருடைய சிறுகதைக் கண்ணுடிக் கூடாக அவரை ஒரு சூனியவாதியா கவே நான்காண்கிறேன். 'மௌ னியை வாசிக்கும் தகைமை உமக்கு இல்லை' என்று க. நா. சு. சொல்லுவார். 'சிறந்த விமர்சனத்தைப் பெறும் தகுதி மௌனிக்கு இல்லை, என்று நாங் களும் கையை விரித்துவிடவேண் டியதுதான்.

மீண்டும் சோவியத் யதார்த் தத்துக்கு வந்தால், 'மாக்சிம் கோர்க்கியின் யதார்த்தம் கரடு முரடானது, கோரமானது, கோடூரமானது, புரட்சிகர உணர்ச்சியை ஊட்டுவது' என்று மாக் சுலோனிம் எழுதுகிறார். 'மனிதன் மனிதாபிமானமற்ற வனுகவும் மிருகத்தனமானவனு கவும் இருந்தும்கோர்க்கி அவனை நம்பினர். மனிதவர்க்கம் மீது தணியா நேசம் பூண்டிருந்தார்' 'பழங்கால ரஷ்யாவைப்பற்றி எழுதவேண்டுமா?' 'ஆம்' என்று கேள்விகேட்டவர்களுக்குப் பதில் கூறிவிட்டுத்தொடர்ந்து கோர்க் கி சொன்னர்: 'ஏனென்றால், வாழ்க்கையின் நிரந்தரமான, இழிவான உண்மை அங்கேதான் இருக்கிறது. அது இன்றும் இன் றைய ரஷ்யாவைப் பீடித்துள் ளது. மனிதனுடைய நினைவிலி ருந்து அதை நீக்கிவிட வேண்டு மேல் பழைய அநாகரிய ரஷ்யா வைப்பற்றி எழுதத்தான் வேண் டும்.' அவரது 'கிழவி இசேகில்' என்ற கதை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். புதுமைப் பித்தனும் பழைய தமிழ் இலக் கியங்களிலிருந்துதானே சாப விமோசனத்தைக் கொடுத்தார்

தனம்மாளுக்கும் சாம்பசிவய்யருக் கும் பின்

பாலச்சந்தரும்
சிட்டிபாபுவும் தான் வீணை
மற்றதெல்லாம் வீணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளையும் கந்தசாமிப்பிள்ளை யையும் கூட்டிக்கொண்டு வந் தார், வாக்கையும் வக்கையும் தந்தார். 'மக்கள் சமுதாயத் தை மறந்து எழுதுகிறவனை மக் களும் மறந்து விடுவார்கள்' என்று இரகுநாதனும் சொல்லி வைத்துள்ளார். 'நாகரத்தினத் தை மறக்காத பாம்பைப்போல் கதாசிரியன் வாழ்க்கையை மறக் கவோ அதைவிட்டு விலகிச் செல்லவோ கூடாது' மீண்டும், 'நிஜப் பொய்தான் யதார்த் தம்' என்று ஒரேயடியாகச் சொன்னார் இரகுநாதன். அப் போ, போலிப் பொய் எது? அது எதுவோ அதுதான் போலி இலக்கியமும். அவிவேக பர மாத்த குருவினதும் சீடர்களி னதும் குதிரை முட்டைக் கதை யும், 'ஆசன சிதம், ஜீவன் நாசம், என்று சாத்திரி அவர் களுக்குச் சொன்னதுவும், அவர் கள் 'குதிரை' பிடிக்கத் தூண் டில் போட்டதுவும் போலி நகைச்சுவைப் பொய்கள். குமு தம், விகடன், கல்கி ஆகியவற் றில் வரும் பெரும்பாலான சிறு கதைகளும், தமிழ்த் திரைப் படக் கதைகளும், ஈழப் பத்திரி கைக் கதைகளும் போலிப் பொய்ச் சிறுகதைகளே. கேவ லம், பரமார்த்த குருக்கள்பற் றிய கதைகள் தரும் நகைச் சுவைப் பண்புகளையோ, அட்டா வதானம் வீரசாமிப்பிள்ளையின் விரைந்த உறைத்த தமிழையோ இவற்றில் காணமுடியாதுள்ள மை எமது அவப்பேறே.

★

தமிழ் உலகத்திலேயே
தனித்துவமான
நகைச்சுவை இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனைக் கண்டேன்

கே. ராமனுதன்

'தாராளமாக வீசும் தண்மைக் காற்று; திறந்த வானம்; தாலாட்டும் தனிமை, வேறு என்ன வேண்டும்?' என்றார் எனது நண்பர் -

'எதற்கு?' என்று வினவினேன்.

'உங்கள் கற்பனைக் குரங்கைக் கட்டவிழ்த்து விடுங்கள் - உங்கள் சிந்தனைப் புறு சிறகடித்துப் பறக்கட்டும். உங்கள் எண்ணமயில் வண்ணமயிலாக ஒயிலாக ஆடட்டும்' என்று நண்பர் நையாண்டி செய்தார்.

இரவு பத்துமணி. தேய்பிறைக்காலம். திரயோதசி இருட்டு. இலங்கையில் கண்டிக்கும் கொழும்புக்குமிடையே 40-வது கல்லுக்கருகில் இருவரும் மேற்கண்டவாறு சம்பாஷித்திருந்தோம். ஒரே வெட்டவெளி இருமருங்கும் பசுமை குலுங்கும் வயல்கள், நாங்கள் பிரயாணம் செய்துவந்த பஸ் முடமாகி நின்றுவிட்டது. அதன் விளைவே இந்த ஏகாந்த சம்பாஷணைகளும், கேலிகளும்.

தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தம் சம்பந்தமாக நான் கண்டிக்குப் போயிருந்தேன். இது பற்றிச் சமரசப் பேச்சுவார்த்தைகள் நடத்த உதவி லேபர் கமிஷனர் திரு ராஜநாயகம் அவசரத் தந்தி அனுப்பியிருந்தார். இதைச் சாக்கிட்டே எனது பஸ் பயணம்.

பசி வயிற்றைக் கிள்ளியது- பார்க்குமிடந்தோறும் பசுமை, கண்ணுக்கு இருளில்கூட உணவு அளிக்கும் காட்சி. ஆனால் கண்ணுக்குணவு கிடைத்தால் கடோற்கஜ வயிறு கேட்குமா?

இரவின் இருளின் கடுமையின் ஆழத்தைக் கண்விரித்து நோக்கினேன். சற்று தூரத்தில் ஒரு விளக்கொளி தென்பட்டது. அதோ ஓர் உருவம் வெள்ளைக் கலை பூண்டு கையில் தடியுடன் வருகிறது. எங்கள் பஸ், ஒரு பெருங்குடிகாரன் பெருமழையில் சிக்கி அவதிப்பட்டு, வீடுவந்து சேரும் வழியில் செயலிழந்து நிற்பதுபோலத் தன்னசைவடுங்கி ஊமையாக நின்றது.

திக்குத் தெரியாத இடத்தில் அகப்பட்டுக்கொண்டோம். இன்று இரவு ஏகாதசிப் பட்டினி சிவராத்திரிக் கண்விழிப்பு - எல்லாம் ஒரேயடியாகச் சங்கமமாகிவிடும் என்றே நான் நினைத்தேன்.

காலாகாலத்தில் கொழும்பு போய்ச் சேரமுடியவில்லையே என்று உள்ளத்தில் புளிப்பேறி உடம்பிலே அசதி யேறிவிட்ட எனது சகப் பிரயாணிகள் பஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியாளர் தொட்டு, பஸ் டிரைவர் வரைக்கும் பாழாகிப் போற, ஏழேழு ஜென்மத்திற்கும் எட்டி வெளியே பார்க்க முடியாத நரகத்தில் சென்று உழலவேண்டும் என்று சாபமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

சகப் பிரயாணிகளில்தான் எத்தனை வகை! ஒரு மனித காட்சிச்சாலையில் வரிசையாக அடுக்கிவைக்கலாம். எல்லோரையும் பற்றி வர்ணிக்க இடமேது? நேரமேது?

அதோ ஒரு ஹாட்சூட் பேர்வழி சுருட்டைப் புகைத்துக் கொண்டு நிற்கிறாரே, அவர் ஒரு தோட்டத்துச் சின்னத்துரை. எல்லாரிடமும் ஆங்கிலம் தான் பேசுவார். ஆங்கிலம் தெரிந்தவர்கள் மட்டும் அவர் மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் மொழியைச் சகட்டு மேனிக்குக் கொலைசெய்வது கண்டு கேளாக் காதினர்களாக இருந்து விடுவது உத்தமம்.

அதோ ஒரு பெண்மணி. ஆணாகப் பிறக்க எண்ணிப் பெண்ணாகப் பிறந்து விட்டதுபோல் அவள் இருந்தாள். மாந்தளிர் மேனியுடன் மினுமினுப்பான வாழ்வில் மிதக்கும் சீமாட்டி அவள்.

இதைத்தவிர ஒரு வக்கீல் இரண்டு மாணவர்கள், நாலைந்து வியாபாரிகள் ஐந்தாறு குடியானவர்கள், ஏழெட்டுத் தொழிலாளிகள் இதில் இருந்தார்கள். 'மீஞ்சிகள்' என்று உருவகப் படுத்தி அழைக்கப்படும் தோட்டத்தில் கொழுந்து பறிக்கும் ஒரு பெண்ணும் இருந்தாள்.

மழை சிறிது தூற்றல்போட்டது. ஆனால் பட்டணத்துக் குழாயைக் கெட்டியாக மூடிய வுடன் நின்றுவிடும் தண்ணீர் போல நின்றுவிட்டது. இந்த மட்டும் க்ஷேமம் என்று நாங்கள் எண்ணினோம்.

விளக்கொளியும் வெள்ளை உருவமும் எம்மை நெருங்கின. 'என்ன நேர்ந்தது?' என்று வெங்கலக் குரலில் சிங்கள மொழியில் அந்த உருவம் பேசியது.

பஸ் டிரைவர் மிகப் பணிவுடன் பதிலளித்தார். 'கண்டியில் புறப்பட்டபஸ் ஏதோ கோளாறு காரணமாக நிலைத்து நின்றுவிட்டது. இப்போதைக்கு இது அசையாது, காலையில் ரிபேர் பார்த்துத்தான் புறப்படவேண்டும்' என்றார்.

வெள்ளை உடைதரித்து வெள்ளிப் பூண் தடியுடன் வந்திருந்தவர் நாங்கள் நின்றிருந்த பக்கத்தில் வந்தார். முதலில் சிங்களத்திலும் பிறகு ஆங்கிலத்திலும் 'எல்லோரும் வாருங்கள், இரவு தங்கிவிட்டுக் காலையில் இங்கு வரலாம்' என்றார்.

கிழே விழாமல் பிடித்துக் கொள்ள ஒன்று கோலின்றிச் சாயும் ஒருவனுக்கு உயரப்பறப்பதற்கு இறகு முளைத்தால் எவ்வளவு அதிசயமாக இருக்கும் அது போல பட்டினி, கண்விழிப்பு இதுவே கதி என்று கருதியிருந்த எங்களுக்கு எதிர்பார்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கு நேர்விரோதமான காட்சி தெரிந்தது.

எல்லோரும் வரிசையாகப் புறப்பட்டோம். சிலர் தயங்கினர். சிலர் மேலும் ஒருமுறை அழைப்பை விரும்பியவர்போல சற்றுத் தாமதம் செய்தனர். 'வாருங்கள்' என்று அவரது மணிக்குரல் மீண்டும் ஒலித்தது.

இளம்பெண் என்ற உணர்ச்சி இந்தியப் பெண் என்ற எண்ணம், தொழிலாளிப் பெண் என்ற தாழ்வு-பாவம் அவளது மனதில் அலைத்திருக்க வேண்டும். அச்சத்தால் குறுகி அவநம்பிக்கையால் ஒடுங்கி அவள் நின்றிருந்தாள்.

'நீங்களும் வரலாம்' என்று நான் குரல் கொடுத்தேன். இருளில் கிடைத்த ஒளிபோல அவளுக்கு அக்குரல் ஒலித்தது போலும். அவளது கண்கள் கேள்விக் குறிகளை வெட்டின. அனுமதி கோரும் வகையில் அகன்று நோக்கின. எல்லாப் பிரயாணிகளுடனும் அவளும் வந்தாள்.

விளக்கு முன்செல்ல ஒருவர் பின் ஒருவராக ஊர்வலம் போலச் சென்றோம். அந்த இரவில் ஆட்களை விட்டு அவர் சமையல் செய்வித்தார். சூடான சாப்பாடு கிடைத்தது. படுக்க இடம் கிடைத்தது. வேறுஎன்ன வேண்டும்? எவ்வித ஊடலும் இன்றி நித்திரா தேவி எங்களை வந்தணைத்தாள்.

காலை புலருவதற்குள் கோப்பையில் தேயிலைப் பானம் தயாராகக் காத்திருந்தது. அதன் ஆவி புகைபோலச் சுழலிட்டது.

அதோ அந்த மனிதர் வெள்ளைஉடை தரித்தவர் வெள்ளிப் பூண் போட்ட தடி உடையவர், 'காலை வந்தனம்! இரவில் நன்றாகத் தூங்கினீர்களா?' என்று அவர் கேட்டார்.

'எங்களை யார் எவர் என்று கேளாமலே இப்படி உதவி புரிந்தீர்க்களே!'- அதிசய உணர்வு அளவிட முடியாத நன்றி உள்ளத்தில் பெருக்கெடுத்தோட நான் கேட்டேன்.

'நீங்கள் யார் என்பது எனக்குத் தெரியும். தொழிலாளர்களுக்காகப் பாடுபடும சமதர்ம ஊழியர். அரசியலில் நம்மிருவருக்கும் எத்தனை ஏணி வைத்தாலும் எட்டாது. ஆனால் இங்கு நீங்கள் என் விருந்தாளி வேறு எவராகவும் நான் கருதமாட்டேன்' என்றார் அவர்.

அந்த வெள்ளை உடைப் பேர்வழிதான் இலங்கைப் பிரதமராக இருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா. இந்தச் சம்பவம் 1940-ம் ஆண்டில் நிகழ்ந்தது. அன்றும் அவர் மந்திரியாகவே இருந்தார். பஸ்ரிப்பேராகிப் போக மந்திரியின் விருந்தாளியாகும் பேறு எனக்குக் கிடைத்தது.

இந்தியத் தொழிலாளர் நாடு கடத்தப்பட்ட அந்தக் கட்டத்தில், இந்தியத் துவேஷப் பிரசாரம் நெறிகட்டிப் போகுமளவு நடைபெற்று வந்த சூழ்நிலையில் இந்தவிருந்தோம்பல் நடந்தது. இதன் நினைவு எனது உள்ளத்தில் இன்றும் பசுமையுடன் விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லியடியில்

இலக்கியக் கூட்டம்

'நெல்லை க. பேரன்'

'மல்லிகை ஆசிரியர் பேசுகிறார்' என்ற அறிவித்தல் கொடுக்கப்பட்டதும் நெல்லியடியைச் சேர்ந்த இளைஞர்களும் இன்னும் பக்கத்து ஊர்களைச் சேர்ந்த கலை, இலக்கிய ஆர்வமுள்ள நண்பர்களும் மற்றவர்களும் கடந்த 29-8-70 அன்று பி. ப. 4 மணிக்கு நெல்லியடி கொட்டில் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் உள்ள 'ஆங்கிலக் கல்லூரியில்' ஒன்று கூடி விட்டார்கள். இலக்கியக் கூட்டம் ஒன்றிற்கு நான் எதிர்பாராத வகையிலேயே கூடுதலான நண்பர்கள் வருகைதந்திருந்தமை எனக்குப் பரம திருப்தியைக் கொடுத்தது.

திரு டொமினிக்ஜீவா அவர்கள் தமது பேச்சைத் தொடங்க முன்னர் திரு. தெணியான் 'ஈழத்துப்படைப்பும் எமதுவாசகர்களும்' என்ற தலைப்பில் மிகவும் சுருக்கமாகப் பேசினார். அவர் பேசுகையில், 'என்றைக்கும் வெளியில் இருந்துதான் தமிழ் இலக்கியம் எமக்கு வரவேண்டும் என்பது அவசியமல்ல. எமது வாசகர்களின் தொகையும் மிகக் குறைவு. நல்லதைத் தெரிந்து அவற்றுக்கே கூடிய ஆதரவை நல்கவேண்டும். டாக்டர் மு. வரதராசனாரின் நாவல்கள் திருக்குறள் மயமானவை. சிறந்த ஈழத்தை உருவாக்குவ பணியில் வாசகர்களின் பங்கு முக்கியமானது' என்றார்.

மல்லிகை ஆசிரியர் திரு. ஜீவா தமது உறுதியானதும் தர்க்கரீதியானதுமான பேச்சை ஆரம்பித்தார். வெளிநாட்டுப் பத்திரிகைகளின் தாக்கம் எமது இலக்கிய கர்த்தாக்களையும் வாசகர்களையும் எவ்வளவு தூரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதித்து எமது இலக்கிய வளர்ச்சிக்கு ஊறுசெய்கிறது அல்லது நன்மை பயக்கின்றது என்ற தோறணியில் பல்வேறு பிரச்னைகளையும் அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராய்ந்தார். அவர் பேசுகையில், 'தரமற்ற சாக்கடை இலக்கியங்களைத்தான் தடைசெய்ய வேண்டும் என்று கேட்கிறோம். எமது நாட்டிலிருந்து ஒரு மாசத்திற்கு 23 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய்கள் வெளி நாடுகளுக்குச் சஞ்சிகைகளுக்காகச் செல்கின்றது. இத்தனை ரூபாய்களையும் இயந்திர சாதனங்களை வாங்குவதற்கு அனுப்பினால் எமது நாட்டில் 800 தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். எம். ஜி. ஆர், சிவாஜிக்குச் சாணி அடிக்கிற கலைகள் இங்கு தேவையில்லை. 25 வருடங்கள் முன்னேடியாக எமது சிங்களச் சகோதரர்கள் முன்னேறிக்கொண்டு செல்கிறார்கள். மார்ட்டின் விக்கிரமசிங்காவின் பெருமை சமீபத்தில் தெரிய வந்தது. இத் தேசத்து எழுத்தாளனின் படைப்புக்கள் செக், ருஷ்ய மொழிகளில் வெளி வந்தது எத்தனை பேருக்குத் தெரியும்? எமது நாட்டில் 600 புத்தகங்கள் வெளிவந்துள்ளன. எத்தனையோ எழுத்தாள நண்பர்கள் தமது பெண்சாதிமாரின் சங்கிலியை விற்றுப் புத்தகம் போட்டிருக்கிறார்கள்.

40 வருடங்களின் முன் யாழ்ப்பாணத்தின் மதிப்பைத் தேடியவர்கள் தமிழகத்துக் கலைஞர்கள். திருநெல்வேலி, மட்ராஸ், தஞ்சாவூர் தமிழ் எங்களுக்குப் புரிகிறது. எங்கள் தமிழ் அவர்களுக்குப் புரியவில்லையாம்! நாங்கள் எந்த நாட்டிற்கும் மொழிக்கும் துவேஷிகள் அல்ல. நாங்கள் சொந்தக் காலில் நிற்க விரும்புகிறோம். மக்கள் இலக்கியங்களை விழுங்குபவர்களுக்குத்தான் நாங்கள் விரோதிகள்.

ஆங்கிலம், பிரெஞ்சு, சீன மொழிகளுக்கு இல்லாத விழாவை தமிழில் 'உலகத் தமிழ் விழா' வாகப் புதிதாக எடுக்கிறார்கள். உண்மையில் தமிழைக் காப்பாற்றி வருபவன் யார்? தொழிலாளர், விவசாயிகள் தான். எமது மொழி வளர வேண்டுமானால் விஞ்ஞானம், மருத்துவம், சட்டம் ஆகிய அனைத்துத் துறைகளும் தமிழில் இடம்பெற வேண்டும்.

(இதன் பின்னர் நடைபெற்ற கேள்வி - பதில் நிகழ்ச்சியை இங்கு சுருக்கமாகத் தருகிறேன்)

சுந்தரராஜன்:- நீங்கள் ஏன் தென்னிந்தியப் பத்திரிகைகளை மட்டும் தடை செய்யக் கோருகிறீர்கள்? தென்னிந்தியத் துவேஷமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவா:- எனது கோரிக்கையை தவருகப் புரிந்துகொண் டீர்கள். உலகின் எந்த மூலையில் இருந்து வந்தாலும் ஆபாசமான கீழ்த்தரமான சாக்கடை இலக் கியங்களோத்தான் நான் எதிர்க் கிறேன், பாரதி, புதுமைப்பித் தன் காட்டிய பாதையின்தான் நாம் வளர்ந்தோம். தமிழகத் துத் தரமான சஞ்சிகைகளான தாமரை, தீபம், கலைக்கதிர், மஞ்சரி போன்றவற்றை நாம் வரவேற்கிறோம், ஏன் இந்திய திரைப்படமான 'செம்மீன்' எம் மத்தியில் நல்ல பெயர் எடுக்க வில்லையா? ஆகவே நான் ஒரு தென்னிந்தியத் துவேஷி என்ற தங்கள் கருத்து தப்பானது.

ஸ்ரீமுருகன்:- வடநாட்டு, மேல் நாட்டு ஆங்கிலப் பத்திரிகைகளில் கொட்டப்படும் ஆபாசம், அவர்களின் திரைப் படங்களும் தடைசெய்யப்பட வேண்டுமா?

ஜீவா:- ஆம். முற்றுக.

சுந்தரராஜன்:- உங்கள் ஈழத்து எழுத்தாளர்க ளின் படைப்புகளில் 'மண்வா சனை' இல்லையே?

ஜீவா: எங்களைப் படித்து விட் டுச் சொல்லுங்கள் நாங் கள்வெறும் கற்பனாவாதிகளல்ல

நெல்லியடி இலக்கிய நண் பர்கள் ஒழுங்கு செய்திருந்த இக் கூட்டத்தில் நெல்லை க. பேரன் தலைமை வகித்தார்; அவர் பேசுகையில், 'நெல்லிய டியில் இப்படியான ஒரு இலக் கியக் கூட்டம் நடைபெறுவது இதுதான் முதல் தடவை. இளை ஞர்கள் மத்தியிலுள்ள இந்த உற்சாகம் தொடர்ந்து வளர வேண்டும்' என்றார்.

மொத்தத்தில் இளைஞர்கள் மத்தியில் புதியதோர் இலக்கிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வல்ல உற்சாகம் நிரம்பிய கூட் டமாக இது அமைந்தது. கிரா மங்கள் தோறும் இப்படியான கூட்டங்கள் நடைபெறவேண்டும் என்பதே எனது விருப்பமுமா கும்.

மல்லிகை ஆசிரியரைக்
கொழும்பில் சந்திக்கும்
முகவரி:

137, மெலிபன் ஸ்ரீட்
கொழும்பு - 11

தொலைபேசி: 20712

அக்டோபர் 7 - 12 திகதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பக்கம்

வீதியில் சந்திப்பவர்களும் பொதுக் கூட்டத்தில் காண்பவர்களுமான ஒரு சிலர் என்னைக் கேட்கும் கேள்வி இதுதான்; ஏன் நீங்களெல்லாம் இந்த நாசகரமான வழியைப் பின் பற்றுகிறீர்கள்? என்பதுதான். வேறு சிலர் பயங் கலந்த மரியாதையுடன் என்னைப் பார்த்து புன்சிரிப்புச் சிரிக்கின்றனர்.

எம்மைப் போன்றவர்கள் ஏதோ பயங்கர நாசத் திற்கு வித்திட்டு விட்டோம் என ஒரு சிலர் அவதூறு பொழிவதில் உண்மை சற்றேனும் இல்லை. அடுத்து ஏதோ மாபெரிய காரியம் ஒன்றைச் சாதித்து விட்டோம் என எம்மைப் பார்த்து மரியாதைப் பயம் காட்டுவதி லும் வேலை இல்லை.

ஆகவே இன்று இந்த நாட்டுக்கு உரித்தான தனித் துவத்தைப் பேணிக் காக்கக் கூடிய ஒரு இலக்கிய பாரம்பரியத்தை உருவாக்க நாம் எடுத்துக்கொண்டுள்ள இந்த முயற்சி இன்று மக்களே விவாதிக்கும் கட்டத் திற்கு வந்துள்ளது என்பது மாத்திரம்தான் உண்மை.

போகப் போக நமது போராட்டத்தின் ஆழமான தாக்கம் இந்த நாட்டுக் கலை, இலக்கியங்களில் பிரதி பலிக்கும். அப்பொழுது இன்று நம்மையெல்லாம் மிகக் கொச்சைத் தனமாகத் திட்டித் தீர்ப்பவர்கள் புரிந்து கொள்பவர்களாக மாறுவார்கள். அத்துடன் இதன் நேரடி லாபத்தை நம்மைவிட இவர்களே அறுவடை செய்வதில் முன் நிற்பார்கள் என்பதும் புதுமையான சங்கதியல்ல.

இன்று சகல பிரதேசத்து இலக்கியக் கூட்டங்களி லும் என்னைக் கலந்து கொள்ளும்படி பலர் அழைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றனர், வசதிக்குட்பட்ட சகல இலக்கியக் கூட்டங் களிலும் நான் பங்குபற்றத் தவறவில்லை. ஏனெனில் இந்தக் கருத்துப் போராட்டத்தில் புடம்போட்டு எடுக் கப்படும் எழுத்தாளர்களை - கலைஞர்களைத்தான் வருங் காலச் சந்ததி ஞாபகத்தில் வைத்திருக்கும். சந்தர்ப்ப வாதிகளையும் 'டபிள் கேம்' விளையாடும் வல்லுநர்க ளையும் காலப் புழுதியில் தூக்கி வீசிவிடும்.

மக்களின் கருத்தின் பின்னால் ஓடுவது அல்ல தலை மையின் பண்பு; மக்களை நமது கருத்துக்களின் பின்னால் அணி திரளச் செய்வதே நமது தலையாய கடமை. அதற்காகச் சில சந்தர்ப்பங்களில் மக்களை எதிர்த்தும் எதிர் நீச்சலிட வேண்டும்.

அடுத்து மல்லிகையைப் பற்றிய குறை நிறைகள்?

மல்லிகை என்றொரு இதழ் மாதா மாதம் ஒழுங் காக வெளிவந்து கொண்டிருப்பதைக் காண இங்கே சிலருக்கு அடிவயிற்றைக் கலக்குகிறது. சிலர் ஆறு மாதம் கணக்குப் போட்டார்கள். மற்றும் சிலர் ஒரு வருடம் ஆருடம் கணித்தார்கள். எல்லா இடுக்கண்களை யும் கடந்து மல்லிகை தொடர்ந்து வெளிவருவதைக் காணச் சகிக்க முடியவில்லை இவர்களால்.

எல்லாவற்றையும் விட நான் சஞ்சிகைக்கு ஆசிரி யராக இருப்பதுதான் அவர்களுக்குத் தாங்க முடியாத கோபம்.

தமிழ் கூறும் நல்லுலகில் தமிழ்ப் பத்திரிகைத் தலை யங்கம் என்றால் அது மல்லிகைத் தலையங்கம்தான் எனக் கடித மூலமும், நேரிலும் என்னைப் பாராட்டி வருகின் றனர்.

உண்மைதான்!- இந்த உண்மையை உணர்ந்தவர்கள் தாராளமாகப் பாராட்டுங்கள். எனக்குப் புதுத்தெம்பு பிறக்கட்டும்.

எனது மனசிலுள்ள் திட்டங்களை எழுத்துருவில் நான் வடிக்க விரும்பினால் எனது ஆதிக்கம் மல்லிகை முழு வதும் பரவி விடும் என ஆழமாகப் பயப்படுபவன் நான்.

எனக்காக அல்ல, புதிய தலைமுறையின் சிந்தனைக் காகவே மல்லிகை இதழை நான் அவர்களினது கரங் களில் சமர்ப்பிக்கின்றேன்.

எனக்குத் தெரியும், மல்லிகையில் வெளிவரும் அத் தனையுமே சிறந்தவையல்ல. சிறந்தவற்றைத் தேடும் தேடல் முயற்சியில் மல்லிகை தனது பங்கை ஆற்ற முனைந்து செயல்படுகின்றது என்பது மட்டும் உண்மை. அறுதியிட்டுச் சொல்கிறேன். அரை நூற்றாண்டுகளுக் கும் பின்னரும் அதனது தலையங்கங்களைப் பற்றியும் நிச்ச யம் பேசப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கவிதைத் தொகுதியைப் படிக்கும்போது
ஈழத்தில் தற்காலத் தமிழ் இலக்கியத்தில்
ஈடுபட்டிருக்கும் புதுப் பரம்பரையினரின்
தரமான இலக்கிய ஈடுபாட்டையும்
விசாலமான பார்வையையும் மட்டுமல்ல,
எதிர்காலத்தில் தமிழ் இலக்கியம் எடுக்கக்கூடிய
வளர்ச்சி உச்சங்களின் அறிகுறிகளையும்,
தரிசிப்பதுபோலவே தெரிகிறது.

"அது" மு. பொன்னம்பலம்

கவிதைத் தொகுதி

எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்

தொடர்புகொள்ளும் முகவரி:

மு. பொன்னம்பலம்
புங்குடுதீவு-11.

பாரதி ஆரம்பித்துவைத்த
தற்காலத் தமிழ் இலக்கியத்திடமும்,
கருக்கூட்டிக் கொண்டிருந்த புதுயுக நனவுநிலை
நனவுஅலை தன்னை இதுவரை வந்திராத
பேரறிவு நிலையாக உணரத்தொடங்கும் கட்டம்
வந்துவிட்டது என்பதை மட்டும்
நிச்சயமாகச் சொல்லலாம்.
போர்ப்பறை கூறும்செய்தி இதுதான்!

"போர்ப்பறை"

ஆசிரியர்:

மு. தளையசிங்கம்

எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

தொடர்புகொள்ளும் முகவரி:

மு. தளையசிங்கம்,
புங்குடுதீவு-11.

Wrapper by Co-op Press Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Ceylon

சோவியத் இனமொழிச் சிறுகதைகள்	ரூ. 1.75
சோவியத் சிறுகதைகள்	ரூ. 2.50
மூன்று ஆண்டுகள் (நாவல்) — அன்டன் செக்கவ்	ரூ. 1.75
ஏகாதிபத்தியம்—முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம் — லெனின்	ரூ. 1.75
கம்யூனிஸ்ட் அறிக்கை — மார்க்ஸ், எங்கல்ஸ்	ரூ. 1.00
நாட்டுப்புற ஏழை மக்களுக்கு — லெனின்	ரூ 1.00
மார்க்ஸையும் எங்கல்ஸையும் பற்றிய நினைவுக் குறிப்புகள்	ரூ. 4.75
அரசு — லெனின்	சதம் 0.25
சிறுவர் சிறுகதைகள்	சதம் 0.90

விவரங்களுக்கு:

மக்கள் பிரசுராலயம்

124, குமாரன் ரத்தினம் ரோட்,

கொழும்பு - 2.

கிளை: 91, கொட்டா ரோட், கொழும்பு - 8.

60, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், முகவரியில் வசிப்பவரும், ஆசிரியரும் வெளியிடுபவருமான டொமினிக் ஜீவா அவர்களுக்காக, மல்லிகை சாதனங்களுடன் யாழ்ப்பாணம் ஸ்ரீ லங்கா அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org